வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 09.05.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 158 | பக்கங்கள் : 16

# இலங்கையில் 5 நாடுகளின் 6 திரிபு வைரஸ்கள் பரவல்!



## யாழ்ப்பாணத்திலும் பலர் அடையாளம் மருத்துவர் சந்திம ஜீவந்தர அதிர்ச்சி தகவல்

கொழும்பு, மே 09

இலங்கையில் 5 நாடுகளின் 6 வைரஸ் திரிபுகள் பரவி வருகின்றன என்று ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பரிசோதனையில் தெரியவந்துள்ளது என்று அதன் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

15




## நேற்றும் 22 பேர் பலி

கொழும்பு, மே 09

இலங்கையில் நேற்று மாத்திரம் 22 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. அதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 786 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் ஒரே நாளில் நேற்றே அதிகளவான கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் 19 கொரோனா மரணங்கள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## யாழ்ப்பாணத்தில் 17,603 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கம்!

* பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறையும் அபாயம்!

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளில் முதல் தடவையாக வாக்காளர் எண்ணிக்கை 9 ஆயிரத்து 761 பேரால் குறைவடைந்துள்ளது. மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் மாத்திரம் 17 ஆயிரத்து 603 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. வாக்காளர் எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ளமையால்,

15

## கொரோனா நெருக்கடியைச் சமாளிக்க தேவையான உதவிகளை வழங்குங்கள்

### உலக சுகாதார ஸ்தாபனத்திடம் சஜித் வேண்டுகோள்



கொழும்பு, மே 09

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பதில் பிரதிநிதி மருத்துவர் ஒலிவியா நிவேராஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் நேற்று முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

கொழும்பிலுள்ள

15

## வடக்கில் நேற்று 25 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணத்தில் 14, வவுனியாவில் 7, கிளிநொச்சியில் 3, மன்னாரில் ஒருவர் என்று நேற்று மட்டும் வடக்கில் 25 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் 7 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இதில், இருவர் நோய் அறிகுறி

15

## நயினாதீவில் திட்டமிடப்பட்ட அரசின் வெசாக் விழா நிறுத்தம்

### கொரோனா பெருந்தொற்றின் தீவிரத்தையடுத்து

யாழ்ப்பாணம், மே 09

நயினாதீவு ஸ்ரீ நாகதீப ரஜ மஹா விகாரையில் நடைபெறவிருந்த அரச வெசாக் திருவிழா, கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது எனப் புத்த சாசன, மத மற்றும் கலாசார விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

15

## 1000 படுக்கைகளுடன் யாழில் சிகிச்சை மையம்

### தேசிய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் ஸ்ரீதரன்



யாழ்ப்பாணம், மே 09

யாழ். மாவட்டத்தில் ஆயிரம் படுக்கைகளுடன் கூடிய தொற்று சிகிச்சை நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

15

## 1,890 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, மே 09

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் நாள்தோறும் வீரியமடைந்து செல்கின்றது. நேற்றும் 1,890 பேருக்குத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. இதன்படி

15

## மகாவலி அபிவிருத்தியில் தமிழருக்கு அநீதி இழைக்க இடமளிக்கப்படாது!

### அமைச்சர் சமல் மாவை சேனாதிராசாவுக்கு உறுதி



யாழ்ப்பாணம், மே 09

மகாவலி அபிவிருத்தி சபை நீர்ப்பாசன நடவடிக்கைகளின்போது, "தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்க இடமளிக்கப்படாது" என்று அமைச்சர் சமல் ராஜபக்ஷ தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு வாக்குறுதி அளித்துள்ளார்.

தமிழ் அரசு கட்சியின் தலைவர்

15



## கொரோனா தனிமைப்படுத்தல் மையங்களாக தேவாலயங்கள்

### இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் முடிவு

கொழும்பு, மே 09

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் அதிகரிப்புடன் ஏற்பட்டுள்ள சிகிச்சை மையங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய தமது தேவாலயங்கள் மற்றும் கட்டடங்களைத் தனிமைப்படுத்தல் மையங்களாகப் பயன்படுத்த முடியும் என்று இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தோடு தங்கள் தேவாலயங்கள் மற்றும் மையங்களைத் தடுப்பூசி

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு குளத்தில் நிறைய மீன்களும் பாம்புகளும் வாழ்ந்து வந்தன. முதலில் நட்பு பாராட்டி இந்த இரண்டு இனங்களும் வாழ்ந்து வந்தன. பருவமழை பொய்த்து குளம் வற்ற ஆரம்பித்ததும் இடத்துக்குச் சண்டை போட்டு குளத்தைப் பிரித்துக் கொண்டு வாழ்ந்தன. ஓர் இனம் வாழும் இடத்திற்கு மற்றோர் இனத்தின் இடத்துக்குப்போகக் கூடாது. மீறினால் எதிரியின் கையில் சிக்கி சரியான உதை கிடைக்கும்.

இதில், ஒரு விலாங்கு மட்டும் தந்திரமாக வேஷம் போட்டு குளம் முழுவதும் சுற்றி வந்து கொண்டிருந்தது.

பாம்புகள் இடத்திற்குப் போகும் போது விலாங்கு தன் நீண்ட உடலையும் பாம்பு போன்ற தலையையும் வைத்து தான் ஒரு பாம்பு என்று காட்டிக் கொள்ளும். மீன்களின் இடத்திற்குப் போகும்போது உடலைச் சுருட்டி மீன் போன்ற துடுப்புகளையும் வாலையும் காட்டி தான் ஒரு மீன் என்று காட்டிக் கொள்ளும்.

இப்படி ஏமாற்றியே பொழுதை ஓட்டிக் கொண்டு இரண்டு இடங்களிலும் உணவு பெற்று குளம் முழுவதும் சுற்றித் திரிந்து வந்தது விலாங்கு.

வெயில் காலம் அதிகமானது. குளம் மேலும் வற்றியது. பாம்புக் கூட்டமும் மீன் கூட்டமும் தங்கள் இடங்களை நெருக்கியும் குறுக்கியும் அமைத்துக் கொண்டே வந்தன.

ஒரு நாள் இரண்டு கூட்டங்களும் ஒன்றின் இருப்பிடத்தை இன்னொன்று பார்த்துக் கொள்ளும் தூரத்தில் வாழும் நிலை வந்தது. அப்போது மீனாக விலாங்கு வேஷம் போட்டால் பாம்புகள் பார்த்து தாக்கின. பாம்பாக வேஷம் போட்டால் மீன்கள் கடித்துக் குதறின.'நான் பாம்பும் அல்ல மீனும் அல்ல' விலாங்கு கதறியது. நம்புவதற்கு யாரும் இல்லை.

'முதலிலேயே உண்மையைச் சொல்லியிருக்கலாமோ' என்று நினைத்துக் கொண்டே செத்துப் போனது.

ஆட்சியிலுள்ளவர்கள் எப்போதும் எதிரணியிலுள்ள வர்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதையே விரும்புவார்கள்.

அதுவும் ஒரு சிறுபான்மை கட்சி ஒன்றின் தலைவர் தமக்கு வேண்டியவராக இருந்தால், தாம் நினைத்தவை எல்லாவற்றையும் அடைந்துவிடலாம் என்று கணக்குப் போடுவார்கள். நமது நாட்டைப் பொறுத்தவரை எப்போதுமே தமிழ் அரசியல்வாதிகளால் ஆளும் தரப்பிற்கு தொல்லைதான். எடுத்ததெற்கெல்லாம் சர்வதேச சமூகம் என்று ஓடிக்கொண்டிருப்பவர்கள் நாம். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது அரசுக்கு ஏற்படவிருந்த ஜெனிவா நெருக்கடியை நம்மவர்களை வைத்தே எதிர்கொள்வதில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றார் என்றே சொல்ல வேண்டும். ஒவ்வொரு தடவையும் அரசுக்காக கால அவகாசத்தை பெற்றுக்கொடுத்தவர்கள் நம்மவர்கள்தான்.

இந்த விசயத்தில் ரணிலின் மாமனார் ஜே.ஆர். ஜெயவர்த்தன படுகில்லாடி. எந்த நாடு நமது இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளித்து நாட்டில் ஒரு யுத்தம் ஆரம்பிக்க வித்திட்டதோ அதே நாட்டின் இராணுவத்துடன் நமது இளைஞர்களை மோதவிட்டவர் ஜே.ஆர்.

மாமா ஜே.ஆரின் பாணியிலேயே மருகர் ரணில் பயணித்தார். அதனைப் பார்த்துத்தான், ராஜபக்ஷ அரசும் தமக்கு வேண்டியவர்களை தமிழர்களின் தலைவர்களாக்க அவ்வப்போது முயற்சி செய்ததாக கூறப்படுவதுண்டு. ஆனால், அதற்காக அவர்கள் தெரிவுசெய்தவர்களால்தான் அப்படியொரு தலைமைப் பதவிக்கு வரமுடியவில்லை.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் நல்லாட்சி ஏற்படும்வரை தமிழ் அரசியல் பரப்பில் நடைபெற்ற சம்பவங்களை இரைமீட்டுப் பார்த்தால் சில உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும். அவை ஒவ்வொன்றாக இங்கே குறிப்பிட்டு உங்களை குழப்ப விரும்பவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஒரு சந்திப்பின்போது, அப்போது எம்.பி.யாக இருந்த முருகேசு சந்திரகுமார், அரசின் சில நடவடிக்கைகளை குறைகூறி கருத்துச் சொன்னராம். அதனை அவதானித்த மஹிந்த, இப்படித்தான் நீங்கள், எங்கள் குறைகளைச் சொல்லி வடக்கில் அரசியல் செய்யவேண்டும் என்று அவரை தட்டிக்கொடுத்தாரம். அப்போது அரச தரப்பிலிருந்த சந்திரகுமார், அரசின் செயல்பாடுகளை கண்டித்து அரசியல் செய்வதையே மஹிந்த விரும்பினார் என்று அண்மையில் ஒரு சந்திப்பின்போது சந்திரகுமார் நினைவு கூர்ந்தார். இப்போது நடக்கும் சம்பவங்களை ஒவ்வொன்றாக ஆழமாக கவனித்தால், பல சந்தேகங்கள் எழுவதை தவிர்க்க முடியவில்லை. பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டிக்கொண்டு விலாங்குகள் நீண்டகாலம் வாழமுடியாதுதான்.

- ஊர்க்குருவி.

## ஜீவன் - சுமந்திரன் நேரில் சந்திப்பு தேர்தல் முறைமை குறித்து ஆய்வு



கொழும்பு, மே 09.

புதிய மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பாக தமிழ் அரசியல் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரான இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் இராசமாணிக்கம், கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொகுதி வாரியான தேர்தல் முறைமையில் தமிழ் பிரதிநிதிகள் எவ்வாறு தமது மக்களுக்கான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவது மற்றும் பாதுகாப்பது தொடர்பாக இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது. இது தொடர்பாக விரிவான கலந்துரையாடலும் இடம்பெற்றது. (இ)

## இ.தொ.காவின் புதிய தலைவர் யார்? அடுத்த மாதம் கூடுகின்றது உயர்பீடம்

கொழும்பு, மே 09

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் பதவி வெற்றிடமாக இருக்கும் நிலையில், தலைவர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று அந்தக் கட்சியின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த மாதமளவில் இதற்கான தெரிவைச் செய்ய முடியுமா என்றும் கட்சியின் உயர்மட்டத்தில் பேச்சுக்கள் ஆரம்பித்துள்ளன என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவின் பின்னர் இ.தொ.காவின் தலைவர் பதவி வெற்றிடமாக இருந்து வருகின்றது. கட்சியின் பொதுச் செயலாளராக ஜீவன் தொண்டமான் நியமிக்கப்பட்ட நிலையில், தலைவர் பதவி யாருக்கு என்ற கேள்வி நீடித்து வருகின்றது.

எவ்வாறாயினும் , தலைவர் பதவிக்கான நியமனங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படாது என்று அந்தக் கட்சியின் உயர்பீடம் கூறிவந்த நிலையில், தற்போது அந்தப் பதவியில் பொறுத்தமான ஒருவரை அமர்த்த வேண்டும் என்று கட்சியின் உயர்மட்டம் ஆலோசித்து வருகின்றது என அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இ.தொ.காவின் பொதுச் செயலாளர் பதவி இளைஞர் ஒருவர் வகித்து வரும் நிலையில், தலைவர் பதவி அனுபவம் வாய்ந்த ஒருவருக்கு வழங்கப்படுமா? இளம் வயதில் ஒருவருக்கு வழங்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பும் அந்தக் கட்சிக்குள் பேசப்பட்டு வருகின் றது.

கட்சியின் தலைமைத்துவம் குறித்து போட்டி நிலவக்கூடும் என்ற செய்திகளும் இ.தொ.காவுக்குள் பேசப்பட்டு வருகின்றன. (இ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுபவர்களை இரவிலும் தேடி பொலிஸ் விசேட சோதனை

கொழும்பு, மே 09

சுகாதார நடைமுறைகள் மற்றும் தனிமைப் படுத்தல் சட்டத்தை மீறி செயற்படுபவர்களைத் தேடி பொலிஸார் இரவு நேரங்களிலும் விசேட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதற்கமைய நேற்றுமுன்தினம் இரவு பகினி கஹபில்லேவ பகுதியின் சிலர் களியாட்ட நிகழ்வு ஒன்றில் ஈடுபட்டிருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் பேலியகொட பகுதியிலுள்ள வீடொன்றில் ஐஸ் போதைப்பொருள் மற்றும் மதுபானம் அருந்திக்கொண்டிருந்த சிலரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

## திருகோணமலையில் பத்து பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று



திருகோணமலை, மே 09

திருகோணமலை, கோமரங்கடவல பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அதிகாரிகள் 10 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் குறித்த அதிகாரிகளுக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (இ)

கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu
09.05.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, சித்திரை 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# கல்முனை பிரதேச செயலக பிரச்னை!

அம்பாறை மாவட்டத்தின் வடக்கு கல்முனை பிரதேச செயலக பிரச்னை, தமிழ் அரசியலின் இயலாமைக்கு ஒரு சிறந்த உதாரணமா? ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் இந்த பிரச்னையை தீர்த்துக்கொள்வதற்கான சூழல், மிகவும் சாதகமாக இருந்தது. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். 14 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கூட்டமைப்பு செல்வாக்கின் உச்சத்தில் இருந்தது. அரசாங்கத்தில் உத்தியோகபூர்வமாக அங்கம் வகிக்கவில்லையே தவிர, மற்றும்படி அரசாங்கத்தை அடிபணியச் செய்யக்கூடிய ஆற்றல் கூட்டமைப்பிடம் தாராளமாகவே இருந்தது. இத்தனையும் இருந்தும்கூட, கூட்டமைப்பினால் கல்முனை பிரதேச செயலக பிரச்னையை வெற்றிகரமாக கையாளமுடியவில்லை.

இந்த இடத்தில் எழும் கேள்வி, கூட்டமைப்பால் முடியவில்லையா அல்லது, கூட்டமைப்பின் தலைவர்களுக்கு எவ்வாறு விடயங்களை பேரம்பேசிப் பெறுவதென்று தெரியவில்லையா? 2009இற்கு பின்னர், தமிழ் மக்களிடமிருந்த - இருக்கின்ற, ஒரேயொரு பலம், தேர்தல் மூலம் கிடைக்கும் பிரதிநிதித்துவ பலம் மட்டும்தான். ஜனநாயக அரசியலில் பிரதிநிதித்துவ பலத்தின் முக்கியத்துவம் என்ன?? அதனைக்கொண்டு எதைச் சாத்தியப்படுத்தமுடியும்? ஒரு மக்கள் கூட்டத்தை பிரதிநித்துவம் செய்யும் அரசியல் தலைமையானது, பொருத்தமான தருணத்தில் தனது பிரதிநிதித்துவ பலத்தை பேரம்பேசும் பலமாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அதுதான் பிரிதிநிதித்துவ பலத்தின் இலக்கு. பேரம்பேசி விடயங்களை சாதிக்க முடியவில்லையாயின், அந்த பிரதிநிதித்துவ பலத்தினால் மக்களுக்கு எவ்வித பயனுமில்லை.

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில், முஸ்லிம்கள் அரசாங்கத்தின் அங்கமாக இருந்தனர். மிகவும் உச்சளவில் அரசாங்கத்தை தங்களின் நலன்களுக்காக பயன்படுத்திக்கொண்டனர். கல்முனை விவகாரமும் அதில் ஒன்று. இந்த விடயத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள்மீது பழிசொல்லமுடியாது. ஏனெனில், அவர்கள் தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு பயனுடையவர்களாக இருந்தனர். ஆனால், கூட்டமைப்பினர் தங்களிடமிருந்த பிரதிநிதித்துவ பலத்தை சரியாக கையாளவில்லை. வரமுடியாத அரசியல் யாப்பொன்றிற்காக, தங்களுக்கு கிடைத்த பொன்னான வாய்ப்பை வீணாக்கினர்.

பொதுவாக அரசாங்கம் பலவீனமாக இருக்கின்றபோதுதான், குறித்த அரசாங்கத்தினை எண்ணிக்கையில் குறைவான மக்கள் கூட்டத்தின் பிரதிநிதிகள் பயன்படுத்திக்கொள்ளமுடியும் ஆனால், கூட்டமைப்போ கிடைத்த வாய்ப்பை உச்சமாக பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கவில்லை.

கல்முனை உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு, அப்பகுதி மக்கள் இரண்டு தசாப்த காலமாக கோரிவருகின்றனர். ஆனாலும், இந்த விடயத்தை இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக, முஸ்லிம் அரசியல்வாதிகள் வெற்றிகரமாக தடுத்துவருகின்றனர். கடந்த ஆட்சிக் காலத்தில் மிகவும் இலகுவாக இந்த விடயத்தை கூட்டமைப்பு கையாண்டிருக்கலாம். ஆனால், கூட்டமைப்பின் பேரம்பேசும் திறனின்மையால், அது கைகூடவில்லை.

கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது, அரசாங்கத்துடன் இணையக்கூடியவர்களுக்கு வாக்களித்தாலாவது, இந்த பிரச்னைக்கு தீர்வு கிடைத்துவிடாதா என்னும் எதிர்பார்ப்பிலேயே விடுதலைப் புலிகளின் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட தளபதியும், பின்னர் ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமானவராகவும் கருதப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு (கருணா) மக்கள் ஆதரவளித்தனர். இதனால் கூட்டமைப்பு, அம்பாறை மாவட்ட பிரதிநிதித்துவத்தையும் இழந்துபோனது. ஆனாலும், பிரச்னை தீரவில்லை. அரசாங்க சார்பில், மட்டக்களப்பில் இரண்டு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் அவர்களாலும் இந்தப் பிரச்னையை தீர்த்துவைக்க முடியவில்லை. ஓர் உப பிரதேச செயலக விவகாரத்தைக்கூட, தமிழ் அரசியல்வாதிகளால் கையாள முடியவில்லை. அரசாங்கத்துடன் நிபந்தனையற்ற வகையில் சேர்ந்துகொள்வதாலும், எதனையும் சாதிக்க முடியாதென்பதையே இந்த விவகாரம் தெளிவாக காண்பிக்கின்றது.

# வாகரை வேடுவர் சமூகம்:



## பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்

மட்டக்களப்பு - வாகரை என்ற பெயரினைக் கேட்டால் நம் நினைவில் சில விடயங்கள் உடனடியாக தோன்றும். அவற்றில் ஒன்று தான் வாகரை வேடுவர் சமூகத்தினர். கடந்த கால உள்நாட்டு யுத்தம் முதல் இன்று வரை ஒரு சில சமூகத்தினர் பாதிக்கப்படுகின்றார்கள் என்றால் அதில் வேடுவர் சமூகமும் அடங்கும்.

வனங்களிலும் குகைகளிலும் வாழ்ந்த இவர்கள் வேட்டையாடியும் மீன் பிடித்தும் தமது அன்றாட வாழ்வைக் கொண்டு சென்றார்கள். தேன், காய்கறிகள் என்பவற்றை விற்று தமது பிற தேவைகளையும் பூர்த்தி செய்து கொண்டார்கள். ஆயினும், யுத்தத்தின்போது எதிர்கொண்ட பாதுகாப்பு பிரச்னை காரணமாக நகரப்புறங்களை நோக்கி நகர ஆரம்பித்தார்கள்.

வாகரையின் கதிரவெளி, மாங்கேணி, புச்சாக்கேணி போன்ற பல இடங்களில் இவர்கள் வாழ்கின்றனர். ஆயினும், இவர்கள் இடம்பெயர்ந்துள்ள பிரதேசங்களிலும், கல்வி மற்றும் வாழ்வாதாரத்திற்காக நகர் புறங்களுக்குச் செல்லும் போதும் பலவிதமான புறக்கணிப்புக்களை எதிர்கொள்கிறார்கள். பாலர் பாடசாலைகளில் ஏனைய குழந்தைகளுடன் தங்கள் குழந்தைகளை இணைத்துப் படிப்பிப்பது முதல் வயது வந்தவர்கள் நகர்புறங்களுக்கு வேலைக்குச் செல்வது வரை பல்வேறு அசௌகரியங்களை சந்திக்கின்றார்கள். அதிலும் பெண் பிள்ளைகளது நிலைமை இன்னும் பாரதூரமானதாக அமைந்துள்ளது.

ஆயினும், தாங்கள் நகர் புறங்களுக்குச் செல்வதற்கு பின்வரும் காரணங்களால் நிர்ப்பந்திக்கப்படுவதாகக் கூறுகிறார்கள்.

தற்போது தங்களுக்கு முன்னர் போன்று காடுகளுக்கு சென்று வேட்டையாட அனுமதியில்லை. பாதுகாப்பை முன்னிட்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. காடுகளில் இடம்பெறுகின்ற மண் அகழ்வுகள், அரிய இன உயிரினங்களின் கடத்தல்கள், தந்தங்கள், மிருகத்தோல் கடத்தல்கள் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெற்றாலும் வேட்டையாடுவதற்கு காடுகளுக்குச் சென்ற தங்களுடைய சமூகத்தினரும் கைதுகளுக்கு உள்ளாகியுள்ளனர். ஆகவே, காடுகளுக்கு செல்வது ஆபத்தானது.

வேறு வேலைகளுக்குச் செல்ல வேண்டுமாயின் தொழில் பயிற்சிகளையும் பாடசாலை கல்வியையும் தமது குழந்தைகளுக்கு வழங்க வேண்டிய தேவையுள்ளது. இங்குள்ள சில பிள்ளைகளை கத்தோலிக்க மடங்களைத் சேர்ந்தோர் பராமரிக்கிறார்கள். அதற்காகவும் நகரங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

* தற்போது இளவயதில் உள்ளவர்கள் நகர்புற வேலைகளில் குறிப்பாக கொழும்பு போன்ற இடங்களில் கூலி அதிகமாக கிடைக்கும் என்பதால் வெளியிடங்களுக்கு வேலைக்காகச் செல்கிறார்கள்.
* அரச நிர்வாகிகளின் அசமந்த போக்குகள், புறக்கணிப்புக்களாலும் நகரங்களை நோக்கி பயணிக்கிறார்கள்.

ஒரு தாய், தனது பெண் பிள்ளை கொழும்புக்கு வீட்டு வேலைக்கு சென்றார் என்றும், அந்த வீட்டினர் எப்போதும் இன ரீதியாக கிண்டலடிப்பதுடன் ஏதாவது கோபம் வருமிடத்து அப்பெண் பிள்ளைக்கு சூடு வைத்துள்ளதாகவும், சாப்பாடின்றி பல நாட்கள் வருத்தியதாகவும் தெரிவித்தார்.

இன்னுமோர் இளம் பெண் தான் நகரிலிருந்து வேலை விட்டு திரும்பும் போது தங்களது தொலைபேசி இலக்கங்களை பலவந்தப்படுத்திக் கேட்கின்றனர் என்றும் தாங்கள் கொடுக்காதவிடத்து தரக்குறைவாக குரலை உயர்த்தி திட்டுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

மேலும், இவ்வாறான அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க முடியாதவர்கள் படித்தும் வீடுகளில் முடங்கிக்கிடக்கின்றனர் என்கிறார் அவர். அத்துடன், வறுமையால் பருவகால பழங்களை காடுகளிலிருந்து பறித்து வந்து வீதியோரங்களில் நின்றவாறு விற்பதாகவும், இதன் போதும் கூட பல்வேறுப்பட்ட வன்முறைகள் சிறுவர்கள், பெண்களுக்கு இடம் பெறுகின்றன என்றும் தெரிவித்தார்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



### நாளை திங்கட்கிழமை முதல்...

# தமிழகத்தில் இரு வாரம் முழுமையான ஊரடங்கு!



சென்னை, மே 09

தமிழகம் முழுவதும் நாளை 10ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை முழுமையான ஊரடங்கு நடைமுறைக்கு வருகின்றது.

இந்த அறிவிப்பை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்த அறிக்கையில்,

கொரோனா வைரஸ் நோய்த்தொற்றைத் தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் மார்ச் 25ஆம் திகதி முதல் தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் நடைமுறையில் உள்ளது.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் மார்ச் 2021 முதல் தொடர்ந்து கோவிட் தொற்று உறுதியாகும் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது. அண்மைக் காலங்களில் இந்திய அளவில் நாளொன்றுக்கு நான்கு இலட்சத்தைத் தாண்டியும் பதிவாகி உள்ளது. குறிப்பாக, மகாராஷ்ட்ரா, கர்நாடகா, கேரளா, உத்திரப்பிரதேசம், டில்லி மட்டுமல்லாமல் பல்வேறு மாநிலங்களில் நோய்த்தொற்று அதிகரிக்கும் நிலை காணப்படுகிறது.

தமிழ்நாட்டிலும் படிப்படியாக இந்த நோய்த்தொற்று, பெப்ரவரி மாதக் கடைசியில் நாளொன்றுக்கு 450 என்ற நிலை மாறி தற்பொழுது நாளொன்றுக்கு 26 ஆயிரத்துக்கும்கும் மேல் பதிவாகி வருகிறது. 23இற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் நோய்த்தொற்று உறுதியாகும் எண்ணிக்கை நாளொன்றுக்கு 10 விழுக்காட்டிற்கும் மேல் உள்ளது.

தமிழ்நாட்டில் 07.05.2021-ஆம் நாள் கணக்கீட்டுபடி, தற்போது நோய்த்தொற்று உள்ளவர்களின் எண்ணிக்கை 1.35 இலட்சமாக உள்ளது. தற்போதுள்ள நோய் பரவல் நிலை, வெளிநாடுகளில் உருமாறிய கரோனா வைரஸின் தாக்கம், அண்டை மற்றும் இதர வெளி மாநிலங்களில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை, மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்களது பரிந்துரையின் அடிப்படையிலும், மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களின் படியும், கொரோனா நோய்த்தொற்றை கட்டுப்படுத்த எதிர்வரும் 10ஆம் திகதி முதல் அதிகாலை 4 மணி முதல் 24 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை இரு வாரங்களுக்கு மாநிலம்முழுவதும் ஊரடங்கு உத்தரவு நடைமுறைக்கு வரும் - என்றுள்ளது.(ஐ)

## ஊரடங்கு காலத்தில் அம்மா உணவகங்கள் தொடர்ந்து இயங்கும்!

சென்னை, மே 09

முழு ஊரடங்கு காலத்தில் அம்மா உணவகங்கள் தொடர்ந்து செயல்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

கொரோனா பரவலை தடுப்பதற்காக தமிழகத்தில் மே 10ஆம் திகதி முதல் 24-ஆம் திகதி வரை முழு பொது முடக்கம் நடைமுறைக்கு வருகின்றது.

இந்தக் காலத்தில், அம்மா உணவகங்கள் தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. சாலையோர உணவகங்கள் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கிணற்றின் கரை இடிந்ததில் சிக்கிய சிறுவன் மரணம்!

இராமநாதபுரம், மே 09

இராமநாதபுரம் அருகே கிணற்றின் கரை இடிந்து புதைகுழியில் சிக்கிய சிறுவன் 10 மணி நேர போராட்டத்தின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

இராமநாதபுரம் மாவட்டம் தெற்கு மல்லல் கிராமத்தை சேர்ந்த நாகராஜ் சுகனேஷ் (வயது 12) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

வியாழக்கிழமை மாலை குளத்தில் குளித்து விட்டு அதன் அருகே உள்ள கிணற்றடியில் நின்றிருந்தார். அப்போது கரையின் ஒருபகுதி திடீரென கீழ் இறங்கியது. பல அடி ஆழம் கீழே இறங்கிய புதைகுழியில் சுகனேஷ் சிக்கினார்.

அவரை மீட்க அப்பகுதியில் நின்றவர்கள் முயன்றனர். முடியாத நிலையில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து அப்பகுதியை தோண்டினர். சுமார் 10 மணி நேரம் நீடித்த பணியில் அதிகாலை 2 மணியளவில் சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார். (ஐ)

## ரூ. 100 கோடி பெறுமதியான போதைப் பொருள் சிக்கியது

சென்னை, மே 09

சென்னை விமான நிலையத்தில் முதல் முறையாக 100 கோடி இந்திய ரூபாய் மதிப்புள்ள 15.6 கிலோ ஹெராயின் போதை பொருளை பறிமுதல் செய்யப்பட்டது. இதனைக் கடத்திச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்துக்கு டோஹாவிலிருந்து வந்த விமானத்திலேயே இந்தப் போதைப் பொருள் கடத்திவரப்பட்டது.

இதனைக் கடத்தி வந்தனர் என்ற சந்தேகத்தில் தன்சானியா நாட்டை சேர்ந்த டிபோரா இளையா (வயது 46) மற்றும் அவருடன் வந்த பெண்ணான பிலீக்ஸ் ஒபடியா (45) ஆகிய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். (ஐ)

## அதிக வட்டி கேட்டனர் எனக்கூறி நிறுவனத்துக்கு தீ வைக்க முயற்சி

கும்பகோணம், மே 09

தமிழ்நாடு கும்பகோணம் அருகே தனியார் நிதி நிறுவனத்தில் அதிகமாக வட்டி வசூலிப்பதாகக் கூறி கோபாலகிருஷ்ணன் என்பவர் நிதி நிறுவனத்தின் உள்ளே சென்று மண்ணெண்ணையை ஊற்றி தீவைக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் அருகே உள்ள மணலூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கோபாலகிருஷ்ணன். விவசாயியான இவர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஆடுதுறையில் உள்ள முத்தூட் நிதி நிறுவனத்தில் நகைகளை அடமானம் வைத்து 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை அங்கு சென்று நகையை மீட்க முயன்றுள்ளார். அப்போது நிதி நிறுவனம் 40 ஆயிரம் ரூபாய் வட்டி கட்ட வேண்டும் என்று கூறினர். இது அநியாய வட்டி என்று கூறி தகராறில் ஈடுபட்ட கோபாலகிருஷ்ணன் கையில் வைத்திருந்த மண்ணெண்ணெயை நிறுவனத்திற்குள் ஊற்றி தீ வைக்க முயன்றுள்ளார்.

இது தொடர்பில் நிதி நிறுவனம் பொலிஸாருக்கு அறிவித்ததை தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸார் அவரை கைது செய்தனர். (ஐ)




**மேடம்**
உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டும் நாள். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கடன் சுமை குறைய நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல் வந்து சேரும்.

**இடபம்**
புதிய பாதை புலப்படும் நாள். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெற மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள். உத்தியோக முன்னேற்றம் எதிர்பார்த்த படி வந்து சேரும். உறவினர் பகை அகலும்.

**மிதுனம்**
நேற்றைய பிரச்னை இன்று நல்ல முடிவிற்கு வரும் நாள். நினைத்த காரியத்தை முடித்து நிம்மதி காண்பீர்கள். கடன் சுமை குறைய நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள். நம்பிக்கைக்குரியவர்கள் சில காரியங்களை முடித்து கொடுப்பர். விரோதிகள் விலகுவர். குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சியில் இருந்த குறுக்கீடுகள் அகலும்.

**சிம்மம்**
தெய்வ வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள். திட்ட மிட்ட காரியங்களில் மாற்றம் செய்வீர்கள். வரவைக்காட்டிலும்செலவு கூடும். நட்பு பகையாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

**கன்னி**
முன்யோசனையுடன் செயல்படுவதன் மூலம் முன்னேற்றம் கிடைக்கும் நாள். முகஸ்துதிக்கு மயங்காமல் இருப்பது நல்லது. உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவார்கள் என்பது சந்தேகம் தான்.

**துலாம்**
துணையாக இருப்பவர்கள் தோள்கொடுத்து உதவும் நாள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். தன்னைச் சார்ந்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள்.

**விருட்சிகம்**
அதிர்ஷ்டமான நாள். அன்றாடப்பணிகள் நன்றாக முடிய நண்பர்களின் ஒத்துழைப்பு கிட்டும். புதிய தொழில் தொடங்குவது பற்றிச் சிந்திப்பீர்கள். பூர்வீக சொத்துகள் சம்பந்தமாக எடுத்த முயற்சி பலன் தரும்.

**தனுசு**
தாராளமாக செலவிட்டு மகிழும் நாள். தக்க விதத்தில் தொழில் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன்வருவீர்கள். பழைய கடன்களைக் கொடுத்து மகிழும் வாய்ப்பு உண்டு.

**மகரம்**
சந்தோஷம் அதிகரிக்கும் நாள். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக கிடைக்கும். மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர்.

**கும்பம்**
வளர்ச்சி அதிகரிக்கும் நாள். நம்பிக்கைக் குரியவர்கள் சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். விரோதிகள் விலகுவர். குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சியில் இருந்த குறுக்கீடுகள் அகலும்.

**மீனம்**
கனவுகள் நனவாகும் நாள். காரிய வெற்றிக்கு குடும்பத்தினர்கள் கைகொடுத்து உதவுவர். திருமண வாய்ப்பு கைகூடும். கூட்டாளிகளால் நன்மை உண்டு. புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

## செய்தியின் பின்னணியில்....

# ஸ்டாலினை வாழ்த்தி நமது அரசியல் தலைவர்கள்




**தி**ராவிட முன்னேற்ற கழகத்தின் (தி. மு. க.) மூன்றாவது வாரிசாக, மு. க. ஸ்டாலின் தமிழ் நாட்டை ஆளும் முதலமைச்சராக பதவியேற்றிருக்கிறார். அண்ணாதுரை, கருணாநிதி என்று, தமிழையும் ஆண்டவர்கள் முன்னையவர்கள்.

ஸ்டாலின் வெற்றிபெற்றதும், இலங்கையின் தமிழ் அரசியல் கட்சிக்காரர்கள் அவருக்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருக்கிறார்கள். ஒவ்வொரு கட்சியினரும் இந்த வாழ்த்தை அவருக்கு தெரிவித்திருக்கிறார்கள். அத்துடன், இலங்கைத் தமிழர்களின் அரசியல் நடவடிக்கைகளில் அவரின் முழு அளவிலான ஆதரவையும் இந்த வாழ்த்துச் செய்திகளில் இவர்கள் தனித்தனியே கோரியிருக்கிறார்கள்.

இலங்கையில் தமிழர்களுடைய அரசியல் வரலாறு, இந்திய சுதந்திர போராட்டத்துடன்தான் பொதுவாக ஆரம்பிக்கிறது. சுதந்திரத்துக்குப் பின்னர், 'தொப்புள்கொடி உறவு' என்ற பதத்துடன் மொழி, மத, கலை, கலாசாரங்களோடு, அரசியலும் தமிழ்நாட்டுடன் அந்நியோன்யம் பெற்றது. அப்போது, திராவிட கட்சிகள் இதில் கூடுதல் நெருக்கம் பெற்றன.

*1949இல் ஆரம்பிக்கப்பட்ட* இலங்கை தமிழ் அரசுக் கட்சி, 1956இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அரசு 'சிங்களம் மட்டும்' சட்டத்தை கொணர்ந்ததிலிருந்து, இலங்கைத் தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியாக பரிணமிக்க ஆரம்பித்தவேளையில், சிதம்பரத்தில் கூடிய தி. மு. க. பொதுச் சபை, இலங்கையில் 'சிங்களம் மட்டும்' சட்டத்துக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியது. கருணாநிதி இத்தீர்மானத்தை பிரேரித்தார்.

*1972இல் சிறிமாவோ பண்டார*நாயக்க தலைமையிலான அரசியல் நிர்ணய சபையில் தங்களின் நியாயமான அரசியல் உரிமைகளுக்கான முயற்சிகள் நிராகரிக்கப்பட்டு, புதிய குடியரசு அரசியலமைப்பு உருவானதும், தங்களுக்கான சுயாட்சி உரிமையை நிலைநாட்ட தீர்மானித்த தமிழ் அரசுக் கட்சி, முதலில் இந்தியாவின் ஆதரவை தமக்கு சாதகமாக்க எண்ணியது. அதற்காக, எஸ். ஜே. வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம், மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், 'சுதந்திரன்' பத்திரிகையின் ஆசிரியர் கோவை. மகேசன் ஆகியோர் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களைச் சந்திக்கச் சென்றார்கள். கட்சி பேதமின்றி, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் அவர்கள் அங்கு சந்தித்தவேளையில், கருணாநிதி தமிழக முதலமைச்சராக விருந்தார். சென்னை மாநகர சபை அப்போது இவர்களுக்கு அங்கு பொது வரவேற்பளித்து கௌரவித்தது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான 1983 ஜூலை கலவரத்தின்போது, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கருணா நிதியும் தி. மு. க. பொதுச் செயலாளர் க. அன்பழகனும் தமது சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்தார்கள்.

தேசிய அளவில், இந்தியாவில் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து, 'ரெஸோ' என்ற ஈழத் தமிழர் ஆதரவு அமைப்பை கருணாநிதி உருவாக்கினார். 1986 மே மாதத்தில், இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வற்புறுத்தி, மதுரையில் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற 'ரெஸோ' மாநாடு பிரமாண்டமானது. இந்திய அரசியல் தலைவர்கள் பலர் இதில் கலந்துகொண்டிருந்தார்கள். இலங்கைத் தமிழர்களின் தனிநாடு கோரிக்கையை, சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின்மூலம் முடிவாக்கவேண்டும் என்று வற்புறுத்தி, 2012இலும் கருணாநிதி 'ரெஸோ' மாநாட்டைக் கூட்டினார்.

தமிழ் நாட்டில் தி. மு. க. அரசின் பதவிக் காலம் மேலும் இரண்டு ஆண்டுகள் இருந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசு ஆதரவு காண்பிப்பதாக தெரிவித்து, 1991 ஜனவரியில் கருணாநிதியின் ஆட்சி மத்திய அரசால் கலைக்கப்பட்டது. நான்கு மாதங்களில் மே 21ஆம் திகதி, தமிழ் நாடு சிறிபெரும்புதூரில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

இலங்கையில் யுத்தம் முடிவுற்ற பின்னர், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ. இ. அ. தி. மு. க.) தலைவி, முதலமைச்சர் ஜெயலலிதா, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இரண்டு தீர்மானங்களை தமிழ் நாடு சட்டசபையில் கொணர்ந்து நிறைவேற்றினார். 2011 ஜூன் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், இலங்கைமீது இந்தியா பொருளாதார தடை விதிக்கவேண்டும் என்று அவர் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தினார். இறுதி யுத்தத்தின்போது நிகழ்ந்தது 'இனப் படுகொலை' என்றும், இதைப் புரிந்த யுத்த குற்றவாளிகளுக்கு சர்வதேச விசாரணையில் தண்டனை வழங்க மத்திய அரசு, ஐக்கிய நாடுகள் சபையை வற்புறுத்தவேண்டும் என்றும், அதுவரை இலங்கையை தனது நட்பு நாடாக இந்தியா பாராட்டக்கூடாது என்றும் அத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

*2013 மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட* தீர்மானத்தில், இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு தனி நாட்டை அமைப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பொன்றை ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானம் ஒன்றின் மூலம் மேற்கொள்ள மத்திய அரசை ஜெயலலிதா வற்புறுத்தினார். இலங்கையில் வசிக்கும் தமிழர்களுடன், உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவேண்டும் என்று அவர் கோரினார்.

இவ்விரு தீர்மானங்களும் அனைத்து கட்சிகளினதும் ஆதரவுடன், சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அத்துடன், தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவும் இருந்தது. அதிலும் குறிப்பாக 2013 தீர்மானத்தின்போது, தமிழகம் முழுவதும் மாணவர்கள் பொங்கி எழுந்தனர். அதுவே தீர்மானத்துக்கு பெரும் தூண்டுதலாகவுமிருந்தது.

இவையெல்லாம் தவிர, இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான பொதுமக்களினதும் அரசியல் தலைவர்களினதும் எத்தனையோ செயல்பாடுகள் தமிழகத்தில் எப்போதுமே நிகழ்ந்தன.

அண்மைக் காலங்களில், திராவிட இயக்கத்தின் இரு பெருந் தலைவர்களாக திகழ்ந்த கருணாநிதியும் ஜெயலலிதாவும் சில ஆண்டுகளுக்கு முன்னர் காலமானார்கள். ஜெயலலிதா 1916 டிசம்பர் 5ஆம் திகதியும் கருணாநிதி 2018 ஒகஸ்ட் 7ஆம் திகதியும் காலமாகினர்.

இறுதிக்கட்ட யுத்த நாள்களில் கருணாநிதிமீது நிலவிய அபிப்பிராயங்களில், கருணாநிதியின் மறைவில் இலங்கைத் தமிழர்களின் உணர்வுகள், எண்ணங்கள், அபிப்பிராயங்கள் பல விதங்களில் வெளியாயின. அவை எழுந்த மானவையாகவோ, தெளிந்த புரிதலுடனோ அல்லது, இன்னோரன்ன பல தன்மைகளில் ஒவ்வொருவரிடமிருந்தும் எழுந்ததாகலாம். ஆனால், தமிழ் தேசிய கூட்டமைப்பு இதனை அணுகிய விதம், இப்படி இந்த தனிமனித உணர்வு வெளிப்பாடுகள்போல் அமைந்து விடக்கூடியதா அல்லது அப்படி கருதி விடப்படக்கூடியதா?

இலங்கைப் பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகி, இந்திய பிரதமர் மொரார்ஜி தேசாயின் அழைப்பில் இந்தியா சென்றபோது, சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் அவரை அழைத்துச்செல்ல முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் காரும் எதிர்க்கட்சித் தலைவர் மு. கருணாநிதியின் காரும் காத்திருந்தன.

இலங்கையில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மரணத்தின்போது, தி. மு. க. வின் சிரேஷ்ட உறுப்பினர்களான ஆர்க்காடு வீராசாமியையும் நாஞ்சில் மனோகரனையும் கருணாநிதி தனது சார்பாக கலந்துகொள்ள யாழ்ப்பாணம் அனுப்பிவைத்தார். அது, கருணாநிதி சார்பானதாக மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்கள் சார்பான மரியாதையாகவும் அமையும். ஆனால், ஜெயலலிதாவின் மரணத்தின்போதோ அல்லது கருணாநிதியின் மரணத்தின்போதோ தமிழ் தேசிய கூட்டமைப்போ அல்லது தமிழ் அரசுக் கட்சியோ தலைவர்களில்லாவிட்டாலும், தமது சார்பில் ஒரு பிரதிநிதியைக்கூட இத் தலைவர்களின் இறுதி அஞ்சலியில் கலந்துகொள்ள அனுப்பிவைக்கவில்லை. அதுபற்றி இவர்களில் எவரும் அவ்வேளையில் கருத்தில் கொண்டதாககூட அறியமுடியவில்லை. இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர்கள் மனோ கணேசன், இராதாகிருஷ்ணன் ஆகியோரும், பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், வடிவேல் சுரேஷ், திலகராஜ் ஆகியோரும் அடங்கிய குழு கருணாநிதியின் இறுதி அஞ்சலியில் கலந்துகொண்டது.

செப்ரெம்பர் 22ஆம் திகதி அப்போலோ மருத்துவ மனையில் அநுமதிக்கப்பட்ட ஜெயலலிதாவின் மரணம், பின்னர் பல நாள்களாகவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. கருணாநிதி, ஜூலை 28ஆம் திகதி காவேரி மருத்துவமனையில் அநுமதிக்கப்பட்ட பதினொரு நாள்களின் பின்னர்தான் இறந்தார்.

ஆக, இருவரின் மரணங்களும் சில நாள்களாகவே எதிர்பார்க்கப்பட்டவை.

அப்படியெனின், இலங்கைத் தமிழ் மக்களை அவர்களின் மக்கள் பிரதிநிதிகள் தமிழ்நாட்டு மக்களுக்கு இச் சந்தர்ப்பங்களில் எப்படி வெளிப்படுத்தியிருக்கிறார்கள்? தமிழ் நாட்டு திராவிட இயக்கத்தில் அடுத்த முதலமைச்சராகும் ஸ்டாலினிடம், இதனைப் புரிந்த ஓர் அரசியல் சாணக்கியம் நிச்சயமாகவே இருக்கும். ●

**— மாலி**





**இறுதிக்கட்ட யுத்த நாள்களில் கருணாநிதிமீது நிலவிய அபிப்பிராயங்களில், கருணாநிதியின் மறைவில் இலங்கைத் தமிழர்களின் உணர்வுகள், எண்ணங்கள், அபிப்பிராயங்கள் பலவிதங்களில் வெளியாயின. அவை எழுந்தமானவையாகவோ, தெளிந்த புரிதலுடனோ அல்லது, இன்னோரன்ன பல தன்மைகளில் ஒவ்வொருவரிடமிருந்தும் எழுந்ததாகலாம். ஆனால், தமிழ் தேசிய கூட்டமைப்பு இதனை அணுகிய விதம், இப்படி இந்த தனிமனித உணர்வு வெளிப்பாடுகள்போல் அமைந்து விடக்கூடியதா அல்லது அப்படி கருதி விடப்படக்கூடியதா?**

# முக்கியஸ்தர்களுக்கு இரகசியமாக இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கல்!

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு*

கொழும்பு, மே 09

**கோவிட் - 19 பரவல் தடுப்புப்பணிகளில் முன்னரங்கில் நின்று பணியாற்றும் அதிகாரிகளுக்கே இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் முழுமையாக வழங்கப்படாத நிலையில், வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் முக்கிய நபர்களுக்கு இரகசியமாக இரண்டாம் கட்டத் தடுப்பூசி வழங்கப்படுகின்றது. இதற்கான ஆதாரங்கள் எம்மிடமுள்ளன.**

**- இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அத்துடன், இது தொடர்பில், இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அந்த சங்கத்தின் தலைவர் மருத்துவர் ருக்ஷான் பெல்லன வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சுகாதாரப் பிரிவினர் மற்றும் கொவிட் - 19 முதலாம் கட்டத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இரண்டாம் கட்டத் தடுப்பூசியை வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும், தடுப்பூசிகளின் பற்றாக்குறை காரணமாக முதலாம் கட்டத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட அனைவருக்கும் வழங்குவதற்குத் தற்போது போதியளவான தடுப்பூசிகள் இல்லை. இதனால் பொதுமக்கள் வெகுவாக அச்சமும் குழப்பமும் அடைந்திருக்கின்றார்கள். அதனால் தமக்கு இரண்டாம் கட்டத் தடுப்பூசியைப் பெற்றுத்தருமாறு பலர் எம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறிருக்கையில் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் வைத்து முக்கிய நபர்களுக்கு இரகசியமான முறையில் இரண்டாம் கட்டத் தடுப்பூசி வழங்கப்படுகின்றது. இவ்வாறு இரு தினங்களுக்கு முன்னர் அதிசொகுசு வாகனங்களில் வருகை தந்து தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டு சென்றமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உள்ளன.

எனவே இது குறித்து இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

மக்களுக்கு வெளிப்படுத்தப்படாத இடமொன்றில் வி.ஐ.பிகள் இரகசியமான முறையில் வந்து தடுப்பூசிகளைப் பெற்றுச் செல்வதால், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னரங்கில் நின்று பணியாற்றும் அதிகாரிகளுக்குத் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறாத நிலையேற்பட்டுள்ளது. இவையனைத்தும் சில மாபியா குழுக்களின் துணையுடனேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (ஐ)

# கள் விற்பனை நிலையங்களை நிபந்தனையுடன் திறவுங்கள்!

*பிரதமருக்கு சந்திரகுமார் கடிதம்*

கிளிநொச்சி, மே 09



கள் விற்பனை நிலையங்களை மூடுவதன் மூலம் அதனை வாழ்வாதார தொழிலாக செய்து வருகின்ற ஏழைக் குடும்பங்களே பெரிதும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். எனவே, அவர்களின் குடும்ப நிலைமையை கருத்தில் கொண்டு கள் விற்பனை நிலையங்களை

நிபந்தனையுடன் திறப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சமத்துக் கட்சியின் பொதுச் செயலரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக கள் விற்பனை நிலையங்களை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இது, கள் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மிகவும் பாதிக்கும் விடயமாகும். ஏனெனில், இக் குடும்பங்கள் அனைத்தும் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் என்பதோடு, தற்போதைய காலம் கள் உற்பத்திக்கான பருவ காலமாகும் எனவே இக்காலத்தில் கள் விற்பனை கடைகளை மூடுவதனால் அவர்களின் பொருளாதாரம் வெகுவாக பாதிக்கப்படும்.

எனவே, தாங்கள் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தி பின்வரும் நடைமுறைகளுக்கு அமைவாக கள் விற்பனை நிலையங்களை திறப்பதற்கு அனுமதியளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நுகர்வோர் கள் விற்பனை நிலையங்களில் வைத்து அருந்துவதைத் தடுத்து கொள்வனவு செய்து கொண்டு செல்வதற்கும், களஞ்சியத்தில் உள்ள போத்தலில் அடைக்கப்பட்ட கள் அல்லது புதிதாக உற்பத்தி செய்கின்ற கள்ளை போத்தலில் அடைத்து விற்பனை செய்யும்

நடைமுறைகளுக்கு அமைவாக திறப்பதற்கும் தாங்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)



# கைதடியில் பிடிபட்ட முதலை புலிக்குளத்தில் விடப்பட்டது!

கிளிநொச்சி, மே 09

யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்பட்ட முதலை ஒன்று கிளிநொச்சி புலிக்குளத்தில் விடப்பட்டது.

யாழ்ப்பாணம் கைதடிப் பகுதியில் வாகன திருத்தகம் ஒன்றிற்குள் நேற்று முன்தினம் இரவு 8 அடி நீளமான முதலை நுழைந்தது.

இதனை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பிடித்து கிளிநொச்சி - பொன்னகர் பகுதியிலுள்ள புலிக்குளத்துக்கு கொண்டு சென்று அதனை பாதுகாப்பாக விடுவித்தனர்.(ஐ)

# மன்னாரில் 8 நாட்களில் மட்டும் 28 தொற்றாளர்கள் அடையாளம்!

மன்னார், மே 09



மன்னார் மாவட்டத்தில் கடந்த 8 நாட்களில் 28 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு மக்கள் கடுமையான சுகாதார நடைமுறைகளை கடைபிடிக்குமாறு மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞான பிரிவுக்கான வைத்திய அதிகாரி மருத்துவர் கதிர்காமநாதன் சுதாகர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் கடந்த 8 நாட்களில் 28 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 461 பி.சி.ஆர்.பரிசோதனைகளின் அடிப்படையில் கொழும்பில் மேற்கொள்ள பரிசோதனைகளுக்கு அமைவாக முதல் கட்டமாக 7 கொரோனா தொற்றாளர்களும், நேற்று வெள்ளிக்கிழமை 15 தொற்றாளர்களுமாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களின் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் தலைமன்னார் பியர், மன்னார் பள்ளிமுனை மற்றும் மன்னார் நகர பஸார் நிலைய பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் 370 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் நகரத்தில் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுகின்றவர்களும், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களும் உரிய முறையில் கொரோனா தடுப்பு நடை முறைகளையும், சுகாதார நடைமுறைகளையும் கடைபிடிக்க வேண்டும்.

உரிய முறையில் கொரோனா தடுப்பு நடைமுறைகளை பின் பற்றாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கடும் சட்ட நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும்.

எனவே மக்களும் பொறுப்புடன் செயல்பட வேண்டும். மேலும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 150 பி.சி.ஆர். பரிசோதனைக்காக முல்லேரியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு இரணைதீவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள பி.சி.ஆர். பரிசோதனைக்கான அறிக்கையும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு மக்கள் கடுமையான சுகாதார நடை முறைகளை கடைபிடித்து கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

# சிறுவர் இல்லத்தை தாக்கியது மின்னல்!

*15 சிறுமிகள் அருந்தப்பு*

மன்னார், மே 15

மன்னாரில் சிறுவர் இல்லத்தின் மீது மின்னல் தாக்கியதில் அங்கிருந்த 15 சிறுமிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

மன்னார் பெற்றா பகுதியில் அமைந்துள்ள வெற்றியின் நல் நம்பிக்கை இல்லத்தின் மீது நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இந்தத் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

மின்னல் தாக்கத்தால் சிறுவர் இல்லத்தின் மின் இணைப்புக்கள் முழுமையாக எரிந்து நாசமாகின. அச்சமயம் சிறுவர் இல்லத்தில் 15 சிறுமிகள் இருந்துள்ளனர். எனினும், எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிய வருகின்றது.

மின்னல் தாக்கி சிறுவர் இல்லம் தீப்பற்றி எரிந்தபோது அங்கிருந்த சிறுமிகளை அயலவர்கள் வெளியேற்றியதுடன் தீயையும் அணைக்க உதவினர். (ஐ)

# நீர்த்தேக்கத்தில் மூழ்கிய குடும்பஸ்தர் பலி!

வவுனியா, மே 09

வவுனியா பம்பைமடு பகுதியிலலுள்ள நீர்த்தேக்கம் ஒன்றில் மூழ்கி காணாமல் போயிருந்த குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டார்.

கற்பகபுரம் பகுதியை சேர்ந்த ரவி (வயது 50) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

மரணமான நபர் நேற்று முன்தினம் அந்த நீர்த்தேக்கப் பகுதிக்கு மீன்பிடிப்பதற்கு 5 பேருடன் சென்றிருந்தார். அச்சமயம், அவர் நீர்தேக்கத்தில் இறங்கிய நிலையில், நீரில் இழுத்துச்செல்லப்பட்டு மூழ்க்கியுள்ளார். இதனை அவதானித்த ஏனைய நபர்கள் அவரை நீருனுள் இறங்கி தேடியுள்ளனர். எனினும் அவரை மீட்கமுடியவில்லை.

நீருனுள் மூழ்கிய நபரை மாலை 6 மணிவரை கிராமத்து இளைஞர்கள் தேடினர். அவரின் நிலை தெரியாமல் கிராம மக்கள் திரும்பிச் சென்றிருந்தனர். இந்நிலையில் நேற்று காலை கடற்படையின் சுழியோடிகள் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் மூழ்கியவரின் சடலம் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ஐ)

# 130 கர்ப்பவதிகளுக்கு தொற்று! இருவரின் நிலை கவலைக்கிடம்!!

கொழும்பு, மே09

**கொரோனா தொற்றுக்குள்ளான 130 கர்ப்பவதி தாய்மார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர் என்று குடும்ப நல சுகாதார பணிய கம் தெரிவித்துள்ளது.**

இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா குறிப்பிட்டார்.

தொற்றுக்குள்ளான அதிகமான கர்ப்பவதி தாய்மார் முல்லேரியா, நெவில் பெர்னாண்டோ மற்றும் ஹோமாகம ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இயலுமானவரை வீட்டில் இருந்து கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுமாறு கர்ப்பவதிகளுக்கு குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா ஆலோசனை வழங்கியுள்ளார். (ஐ)




## சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், மே 09

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தேசிய, மாவட்ட மட்டங்களில் முதலிடங்களைப் பிடித்த மாணவர்கள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த வியாழ்க்கிழமை இடம்பெற்ற இந்த கௌரவிப்பு நிகழ்வில் கணித பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம் பிடித்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் த.சுந்தர்பவனுக்கு 20 ஆயிரம் ரூபாய் பணப்பரிசிலும், விஞ்ஞான துறையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி க.கவினா, கலைத்துறையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பிடித்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி ச.நிலானி ஆகியோருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் பணப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த கௌரவிப்பு நிகழ்வுக்கு கொச்சிக்கடை லயன்ஸ் கழகத்தின் இரண்டாவது உப மாவட்ட ஆளுநர் பதவிக்கு போட்டியிடும் ராஜித ரொட்றிகோ அனுசரணை வழங்கியிருந்தார். (ஐ)

## தாத்தாவானார் ஜனாதிபதி கோட்டாபய

கொழும்பு, மே 09

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மகனான மனோஜ் ராஜபக்ஷ - செவ்வந்தி லியனாராச்சி தம்பதிக்கு நேற்று குழந்தை பிறந்தது.

இருவரும் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர். இதனால், அடுத்து வரும் நாட்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனிப்பட்ட பயணமாக அந்நாட்டுக்கு செல்வார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)



புலிகளின் தலைவர் படத்துடன் ரீ-சேர்ட்

## தமிழக மீனவர்கள் தொடர்பில் கடற்படையினர் விசாரணை!

கொழும்பு, மே 09

விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் பொறிக்கப்பட்ட உடையுடன் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்த தமிழக மீனவர்கள் தொடர்பில் விசாரணைகளை கடற்படை ஆரம்பித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை தமிழக மீனவர்கள் சட்டவிரோதமாக இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர். அந்தப் படகை இலங்கை கடற்படையினர் சுற்றிவளைத்தனர்.

அவற்றில் ஒரு படகில் இருந்தவர்கள் அணிந்திருந்த ரீ - சேர்ட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் புகைப்படமும், 'மேதகு வே. பிரபாகரன்' என்றும் பொறிக்கப்பட்டிருந்தது.

இதனை அவதானித்த கடற்படையினர் குறித்த மீனவர்களை ஒளிப்படம் மற்றும் காணொலி எடுத்தபின்னர் அவர்களை விடுவித்தனர்.

தற்போது, அந்த ஒளிப்படங்கள் காணொலியை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# மணப்பெண் அலங்காரம் செய்ய கொழும்பு சென்றவருக்கு தொற்று!

கொழும்பில் நடந்த திருமணம் ஒன்றிற்கு மணப்பெண்ணை அலங்காரம் செய்வதற்காக சென்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த யுவதி ஒருவர் தொற்றுக்கு இலக்காகியுள்ளார்.

வலிகாமம் கிராமிய சித்த வைத்திய நிலையம் ஒன்றில் பணியாற்றுபவரே இவ்வாறு தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு வெளியான பி. சி. ஆர். முடிவில் அவர் தொற்றிற்கு உள்ளானமை உறுதியானமையை தொடர்ந்து, அங்கு பணியாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடம் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

அண்மைய நாட்களில் யுவதிக்கு சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளார்.

எனினும், கடமைக்கு சமுகமளித்த நிலையில், கொரோனா அறிகுறிகள் வலுவடைந்ததை தொடர்ந்து, பி.சி.ஆர். மாதிரி பெற்ற பின்னர் கடமைக்கு திரும்பும் படி அறிவுறுத்தப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, யாழ். போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற போதே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார்.

பாதிக்கப்பட்ட யுவதி மணப்பெண் அலங்கார துறையிலும் ஈடுபடுகிறார். கொழும்பில் நடந்த திருமணம் ஒன்றுக்காக மணமகள் அலங்காரத்துக்கு சென்று வந்தமையை அடுத்தே அவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)



அத்துமீறிய வியாபாரத்தை தடுக்க

## நல்லூரில் மாநகர காணிக்குள் எவரும் நுழையாதவாறு வேலி!

யாழ்ப்பாணம், மே 09

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவின் பின்புறமாகவுள்ள வெற்றுக் காணி எவரும் அத்துமீறி செல்லாதவாறு முள்கம்பி வேலியால் அடைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபைக்கு சொந்தமான இந்த ஆதனத்துக்குள், அத்துமீறி இடம்பெறும் செயல்பாடுகளை தவிர்க்கும் நோக்கிலேயே இவ்வாறு அடைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தக் காணி, இதுவரை காலமும் திறந்த வெளியாக காணப்பட்டது. இதனால், அதனை சில வர்த்தக நிறுவனங்கள் மாநகர சபை அனுமதியுடன் உரிய குத்தகை பணம் செலுத்தி தமது பொருட்களின் வியாபார மற்றும் விளம்பர நோக்கங்களுக்கு பயன்படுத்தினர்.

ஆனால், சிலர் அத்துமீறிய செயல்பாட்டில் ஈடுபட்டனர். இதனால் அந்த ஆதனத்தை பாதுகாக்கும் நோக்குடன் மாநகர சபையின் அனுமதியின்றி எவரும் உட்செல்ல முடியாதவாறு ஆதனத்தை சூழ முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

ஈழத் தமிழர் இனப்படுகொலை அறிவூட்டல் வாரம்

# ஒன்ராறியோ தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம்!

கொழும்பு, மே 09

இலங்கை தமிழர் இனப்படுகொலை அறிவூட்டல் வாரத்தை அங்கீகரிக்கும் தனிநபர் பிரேரணை கனடா - ஒன்ராறியோ சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமைக்கு இலங்கை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

"சட்ட வரைவு 104 (Bill 104) என்ற இந்த சட்டமூலம் குறைபாடுள்ள முன்மாதிரியாகும். ஆதாரங்களின்றி அனுமானங்களின் பிரகாரம், அப்பட்டமான பொய்களை அடிப்படையாகக் கொண்டதாக இது அமைந்துள்ளது", என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையாலோ, வேறெந்தவொரு உலக நாடுகளாலோ அல்லது இலங்கையின் நட்பு நாடான கனடாவாலோ இனப்படுகொலை நடந்ததற்கான ஆதாரங்கள் எதனையும் இதுவரை கண்டறிய முடியவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

இலங்கை தமிழர் இனப்படுகொலை அறிவூட்டல் வாரத்தை அங்கீகரிக்கும் தனிநபர் பிரேரணை கனடா - ஒன்ராறியோ சட்டமன்றத்தில் ஆளும், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் கடந்த மே 6ஆம் திகதி வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இதன்மூலம் மே-18 ஆம் திகதியுடன் முடிவடையும் 7 நாட்கள் ஒன்ராறியோவில் ஆண்டுதோறும் தமிழர் இனப்படுகொலை அறிவூட்டல் வாரமாக கடைப்பிடிப்பதற்கான சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தனி தேசமாக கருதப்படுவதற்கு தேவையான குணாதிசயங்கள் தமிழ் மக்களுக்கு உண்டு

ஒரு தனித் தேசமாக கருதப்படுவதற்குத் தேவையான சகல குணாதிசயங்களும் தமிழர்களான எங்களுக்கு உண்டு என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாராந்த கேள்விகளுக்கு பதில் அளிக்கும் வகையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

**இலங்கைத் தமிழ் மக்களின் தற்போதைய அவல நிலை பற்றி சுருக்கமாக விளக்க முடியுமா?**

தமிழர்கள் ஒரு பண்டைய இனத்தவர். தமிழ் பேசும் மக்களே இலங்கையின் பூர்வீகக் குடிகள். முதலில் சைவர்கள் முழுத் தீவையும் ஆக்கிரமித்து இருந்தனர். வரலாற்றுக்கு முற்பட்ட சிவன் கோவில்களான நகுலேஸ்வரம் (வடக்கில் கீரிமலை), திருக்கேதீஸ்வரம்(மன்னார் மாவட்டம்), திருக்கோணேஸ்வரம் (கிழக்கு திருகோணமலை மாவட்டம்), முன்னேஸ்வரம் (மேற்கு சிலாபம் மாவட்டம்) மற்றும் தொண்டேஸ்வரம்(தெற்கு தேவேந்திர முனை) ஆகியவை இந்தத் தீவு மக்களின் ஆதி சமயம் சைவம் என்பதனைக் காட்டுகின்றன. பாண்டியர்கள், பல்லவர்கள், சோழர்கள் மற்றும் வேறு பலரின் வெற்றிகள் இலங்கையில் தமிழரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளன. தொடர்ச்சியாக சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் சிங்களம் பேசுவோருக்குச் சார்பாக வடக்கு, கிழக்கில் மக்கள் தொகையை மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் இன்று வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி பேசும் மக்களே பெரும்பான்மையினராக உள்ளனர்.

அரசியல் யாப்பின் சரத்து 29(2) வது பிரிவை நீக்கியதனூடாக ஆங்கிலேயரையும் தமிழ் பேசும் மக்களையும் ஏமாற்றிய சிங்களத் தலைவர்கள் தமிழ்ப் பேசும் மக்களை அடிபணியும் இனமாக ஆக்கும் வகையில் அரசாங்கத்தின் ஆட்சியை முழுத் தீவின் மேல் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். போர் முடிந்து 12 ஆண்டுகள் கடந்தும் வடக்கு, கிழக்கில் இன்னமும் ஓர் ஆக்கிரமிப்பு இராணுவத்தை வைத்திருக்கிறார்கள். எங்களின் வளங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. தொடர்ந்து நிலங்கள் அபகரிக்கப்பட்டு சிங்கள மொழி பேசுவோருக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 60,000 ஏக்கர் அரசாங்க காணிகளையும் 3000 ஏக்கர் தனியார் காணிகளையும் இராணுவம் தொடர்ந்து ஆக்கிரமித்து வைத்துள்ளது. பல தரப்பட்ட சாக்குப் போக்குகளின் கீழ் அரசாங்க அனுமதியுடன் வடக்கு கிழக்கு பௌத்த பிராந்தியமாக மாற்றப்பட்டு வருகிறது. அரச சேவைகளுக்கு தமிழர்கள் உள்வாங்கப்படுவது மேலும் குறைவடைந்தபடி சென்று கொண்டிருக்கிறது. வேலையின்மை அதிகரித்துள்ளது. தமிழ் பேசத் தெரியாதவர்களே வடக்கு, கிழக்கில் காவல் பொலிஸ் திணைக்களத்தில் உள்ளனர். கொடுக்கப்படும் புகார்கள் சிங்களத்தில் பதியப்பட்டு மொழி பெயர்க்கப்படுகின்றன. முதலமைச்சராக நான் இருந்த போது மத்திய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தும் போருக்குப் பின்னரான வடக்கு கிழக்கில் சரியான தேவைகளின் மதிப்பீடோ அன்றி பொருளாதாரத் திட்டமிடலோ மேற் கொள்ளப்படவில்லை. வடக்குக் கிழக்கில் கல்விக்கு மாற்றாந் தாய் மனப்பான்மை காட்டப்படுகிறது. வேறு பல துறைகளிலும் இதே நிலைமைதான். ஒரு தேசம் என்கிற வகையில் தங்களது பாரம்பரிய தாயகத்தின் நிர்வாகம் மற்றும் ஆளுகை மீது எதுவித கட்டுப்பாடும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு இல்லை. நாங்கள் ஒரு அடிமைப்படுத்தப்பட்ட இனம்.

இலங்கையில் முதல் நிறுவப்பட்ட தமிழ் அரசியல் கட்சி 'அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்' ஆகும். தற்போது 20க்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட கட்சிகள் உள்ளன. தமிழ் மக்களிடையே காணப்படும் இந்தப் பிளவுகளை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

தமிழர்களாகிய நாங்கள் ஜனநாயகத்தை மிகவும் அக்கறையுடன் பின்பற்றுகிறோம் என்பதையே அது காட்டுகிறது. எந்த ஒரு தனி நபருக்கோ அல்லது கட்சிக்கோ ஆதிக்கம் செலுத்தவோ ஆணவப்படுத்தவோ உரிமை வழங்கப்படவில்லை. அது எப்படி இருந்த போதும் கொள்கை மற்றும் நோக்கம் தொடர்பில் அடிப்படையில் பெரும்பான்மையான கட்சிகளிடையே அதிக வேறுபாடுகள் கிடையாது. ஒட்டுமொத்தமாக சமூகத்தைப் பாதிக்கும் பொதுவான பிரச்சனைகளில் இந்தக் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். உதாரணத்திற்குக் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை ஒன்றிணைந்து எதிர் கொள்ள வேண்டும்.

**நீங்கள் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர். ஆகவே, தேசங்கள் இணைந்து இலங்கையர்கள் ஆவதற்கான உங்கள் யுக்தி யாது என்பதை எங்களுக்கு தெரியப்படுத்துவீர்களா?**

இதனை அடைவதற்கான சக்தி உண்மையில் தங்கியுள்ளது. இந்த நாட்டின் உண்மையான வரலாறு பற்றி சாதாரண மக்களுக்கு நாம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சிங்கள மக்களின் உண்மையான வரலாற்றை தமிழ் மக்களும் தமிழ் மக்களின் உண்மையான வரலாற்றைச் சிங்கள மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும். இந் நாட்களில் என்னால் முடிந்த வரை அதனை நான் செய்து வருகிறேன். இதே போல் இறுதி யுத்தத்தின் போது நடந்த உண்மைகளை சிங்கள மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். யுத்தத்தில் கொல்லப்பட்டோர் எத்தனை பேர்? சரணடைந்த மக்கள் மற்றும் போராளிகளுக்கு என்ன நடந்தது என்பதை சிங்கள மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் நாம் சுயாதீன சர்வதேச விசாரணையைக் கோருகிறோம். எவரையும் தூக்கில் தொங்க வைப்பதற்காக நாம் சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுக்கவில்லை. சிங்களவர் சரி, தமிழர்கள் சரி மக்கள் உண்மையை அறிந்திருக்க வேண்டும். சிங்கள மக்களை இருட்டுக்குள் வைத்துக் கொண்டு நாம் நல்லிணக்கத்தை நாடமுடியாது. உண்மையே நல்லிணக்கத்திற்கான வழியாகும். இருக்கின்ற சக்திகள் உண்மையை விலக்கி வைத்துக் கொண்டு அதற்குப் பதிலாக பொய்களை வழங்க முயற்சிக்கின்றன. ஏப்ரல் 21 துயரம் சம்பந்தமாகக் கூட உண்மைகள் வெளிவர வேண்டும். உண்மைகளை அறிந்து கொள்வதற்காக உள்ளூர்வாசிகளுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் உதவுவதே எங்களுடைய யுக்தியாகும்.

1948இல் சுதந்திரம் அடைந்ததில் இருந்து கடந்த 73 ஆண்டுகளாக தமிழ் அரசியல் கட்சிகள் தமிழர்களின் ஜனநாயக உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக்கின்றன. கடந்த தேர்தல்களுக்குப் பின்னர் தமிழர்கள் தங்கள் பேரம் பேசும் சக்தியை இன்று இழந்துள்ளனர். வருங்காலத்தில் அவர்களின் அரசியல் போராட்டத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

கடந்த தேர்தல்களுக்குப் பின்னர் தமிழ் மக்கள் தங்களது பேரம் பேசும் சக்தியை இழந்து விட்டார்கள் என்னும் கூற்றை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். நீங்கள் கூறும் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தி நல்லாட்சி ஆளுகையின் போது தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க உதவியதா? ஒரு காலத்தில் தமிழ் மக்களுக்கு மிகப் பிரமாண்டமான பேரம் பேசும் சக்தி இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த நன்மையை சமூகத்தின் மேம்பாட்டுக்காக நாம் பயன்படுத்தவில்லை. ஜனநாயக வழிமுறைகள் ஊடாக அவர்களின் ஆதரவை நாம் சரியாகப் பயன்படுத்தும் போது நீங்கள் குறிப்பிட்ட அந்த பேரம் பேசும் சக்தியை நாங்கள் மறுபடி பெற்றுக் கொள்ள முடியும். இதே போல் நமது அறிவையும், பொருளாதாரத்தையும் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தும் போது நம்முடைய பேரம் பேசும் சக்தியை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியும். அரசியலிலும் மற்றும் பொருளாதாரத்திலும் நாம் புதுமையாகச் சிந்தித்துச் செயற்படுவோமேயானால் நாம் மிகப் பெரிய பேரம் பேசும் சக்தியை அடைந்து கொள்ள முடியும். அதே வேளை அரசாங்கம் நம்மை எந்தளவுக்கு அதிகமாக ஒடுக்குகிறதோ அதே போல் எமது பேரம் பேசும் சக்தியும் அதிகரிக்கும் என்பதே உண்மையாகும். எமது அரசியல் போராட்டம் உலகம் வாழ் தமிழருக்கும் உள்ளூர் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையில் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.

சுயநிர்ணய உரிமை மற்றும் பிரிவினைவாதம் என்பவை பற்றிய உங்கள் பார்வையை எங்களுக்கு விளக்கமாக கூறமுடியுமா?

வயதுக்கு வந்து திருமணம் முடித்த மகன், தான் (பிறந்த) பரம்பரை வீட்டு எல்லைக்குள் தனியாக வாழ முடிவு செய்தால் அது சுயநிர்ணயமாகும். பரம்பரைவீட்டின் எந்தவொரு பகுதியையும் விட்டு வெளியேறித் தனது குடும்பத்தைத் தனியாக வேறொரு இடத்தில் அமைக்க முடிவு செய்தால் அது பிரிவினைவாதமாகும்.

சாதி அடிப்படையிலான மனோநிலை வடக்கு கிழக்கு மற்றும் தெற்கில் வாழும் சமூகத்திற்கு ஒரு பேரழிவாகும். இந்த சாதி முறைமையை முறியடிக்கும் வழியைக் காட்டமுடியுமா?

கல்வியும், அன்பும் சாதி முறைமையை முறியடிக்கக் கூடிய இரு ஆயுதங்கள் ஆகும். கல்வி மக்களிடம் அறிவொளியைக் கொண்டு வரும். அது மனிதன் பிறக்கும் போது சமம் என்பதை வலியுறுத்தும். ஆனால் மக்களின் மனங்களை காலாவதியாகிப் போன கட்டுப்பாடுகள் பற்றிப் பிடித்தபடி இருப்பதால் அவர்கள் சங்கிலிகளால் கட்டுண்டு கிடக்கிறார்கள். நமது இதயங்களில் உள்ள அன்பு கல்வியால் நாம் புரிந்து கொண்டதை நிறைவேற்றுவதற்கும் அறிவொளி காட்டும் இலக்குகளை அடைவதற்குமான சக்தியைத் தரும்.



இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் இந்தியா அல்லது சர்வதேச சமூகம் மீது நம்பிக்கை வைத்துள்ளீர்களா?

சர்வதேச சமூகமும், இந்தியாவும் எங்கள் உரிமைகளை வென்றெடுத்துத் தரும் என நான் நம்பவில்லை. ஆனால் இந்தியாவையும், சர்வதேச சமூகத்தையும் நாம் ராஜதந்திரத்தோடும் புத்திசாதுரியத்தோடும் அணுகுவோமானால் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என நான் நம்புகிறேன். இதற்காக எமது சகல அரசியல் கட்சிகளுக்கும் அரசியல் நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கக் கூடிய வகையில் சிந்தனைத் தொட்டிகள் (Think Tank) நிபுணர்கள் குழுமங்கள் (Expert Committees) போன்ற அடிப்படை நிறுவன அலகுகளை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி என்கிற வகையில் சுதந்திரமாகப் பேசக்கூடிய பல விசேட சலுகைகள் உங்களுக்கு உண்டு. ஆனால், சாதாரண குடிமக்களின் பேச்சுச் சுதந்திரம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் அச்சுறுத்தப்படுகிறது. உங்களது அறிக்கைகள் பேச்சுக்கள் நாட்டில் இனங்களுக்கிடையே பதட்டத்தைத் தூண்டுவதாக ஒரு குற்றச் சாட்டு உங்கள் மீது சுமத்தப்படுகிறது. நீங்கள் நல்லிணக்கத்திற்கு எதிரானவரா?

என் வாழ்க்கையை நீங்கள் பார்த்தீர்களானால் நான் எப்போதும் அமைதி, நல்லிணக்கம், செழிப்பு ஆகியவற்றின் பக்கமே. நான் கிட்டத் தட்ட ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே வன்முறையைத் தவிர்த்து விட்டேன். ஆனால் பிழையாக தகவமைக்கப்பட்ட இனவாதிகளை அணுகி அவர்களுக்கு உண்மையைக் கூறினாலும் அவர்கள் எனது கருத்துக்களைத் திரிபுபடுத்தியே பார்க்கிறார்கள். அது எனது கர்மாவாக இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# சீன பாதுகாப்பு அமைச்சரின் வருகையும் புவிசார் அரசியல் மாற்றமும்

பேராசிரியர்
கே. ரீ. கணேசலிங்கம்

இலங்கை சீன உறவை பலப்படுத்தும் விதத்தில் சீனப் பாதுகாப்பு அமைச்சர் இரு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக *28.04.2021* இலங்கைக்கு வருகை தந்துள் ளார். அவரது வருகை ஆசிய நாடுகள் எங்கும் கோவிட் -19 தொற்றின் பரம்பல் தீவிரமடைந்திருக்கின்ற வேளையிலும் இந்தியா பாரிய மனித அழிவை எதிர் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலும் நிகழ்ந் துள்ளது.

மரணித்த உடல்கள் அடக்கம் செய்யவோ தகனம் செய்யவோ முடியாத துயரத்தை டெல்லி அனுபவித்துக் கொண்டிருக்கும் போது சீன பாதுகாப்பு அமைச்சர் வே பெங்கெற் இன் விஜயம் இலங்கையை நோக்கி நிகழ்ந்துள்ளது. இந்தியாவின் புவி சார் எல்லைக்குள் முக்கியம் பெறும் நாடான இலங்கையுடன் சீன உறவு அதிக விமர்சனங்களோடு பார்க்கப்படுகின்றது. இக் கட்டுரையில் சீன பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை வருகை ஏற்படுத்தவுள்ள விளைவுகளை தேடுவதாக உள்ளது.

சீன பாதுகாப்பு அமைச்சர் தனது விஜயத்தின் பிரதான சந்திப்பாக இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரோடு உரையாடியுள்ளார். அத்தகைய உரையாடலில் இரு நாட்டுக்குமான அரசியல், பொருளாதார, கலாசார விடயங்களே முதன்மைப்படுத்தப்பட்டன என்றும், இலங்கை ஜனாதிபதியுடனான உரையாடலில் சுமூகமானதாகவும் பயன் மிக்கதாகவும் அமைந்ததெனவும் சீன பாதுகாப்பு அமைச்சர் வே பெங்கெற் தெரிவித்துள்ளார்.

இதே போன்று பிரதமரை சந்தித்த போது உரையாடிய விடயம் தொடர்பாக சீன பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்த போது, இரு நாட்டுக்குமான நட்புறவை பலப்படுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சீன பாதுகாப்பு அமைச்சரின் முன்னிலையில் உரையாற்றுகின்ற போது கோவிட் - 19 தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு முதலீடுகளை ஊக்கவிக்கவும் அதற்கான நம்பிக்கையை வளர்ப்பதற்கான ஆதரவை அதிகரிக்க சீன அரசிடம் எதிர்பார்ப்பதாகவும் அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களில் இரு நாடுகளும் நெருக்கமாகப் பணியாற்ற இலங்கை எதிர்பார்ப்பதாகவும் ஆறு இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளை சீனா வழங்கியதற்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அவ்வாறு *27.04.2020*இல் சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சரின் தலைமையில் இலங்கை, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடனான சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தனர். கோவிட் - 19 தொற்றின் பின்னரான பொருளாதார நெருக்கடியை சரிசெய்யும் முகமாக சீன வெளிவிகார அமைச்சர் தலைமையில் சிநேகபூர்வ உரையாடல் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த உரையாடலில் வெளிவிகார அமைச்சர் தினேஷ் குண வர்த்தன கருத்துத் தெரிவிக்கும் போது, சீனாவிடமிருந்து மேலும் அதிக முதலீடுகளையும் முதலீட்டுத் திட்டங்களையும் இலங்கை எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட தகவல்களை அவதானிக்கின்ற போது இலங்கை சீன உறவு மேலும் பலமடைவதற்கான வெளியுறவுக் கொள்கையை இலங்கை பின்பற்றுகின்றது என்பதை காட்டுகிறது. சீன பாதுகாப்பு அமைச்சரோடு அரசியல் பொருளார விடயங்களைவிட இராணுவ விடயங்களே அதிகம் கலந்துரையாடப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அத்தகைய கருத்துப் பகிர்வுகள் எதுவும் பெரிதாக ஊடகங்களில் ஆதிக்கம் பெறவில்லை. கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் ஏற்பட்ட நெருக்கடியும் சீன காலனித்துவ வாதங்களும் எழுந்து இலங்கை ஒரு கொந்தளிப்பு நிலைக்குள் அகப்பட்டுள்ள போது சீன பாதுகாப்பு அமைச்சரின் வருகை நிகழ்ந்திருக்கின்றது. இதனையே சீனா உலக நாடுகளில் பின்பற்றி வருகிறது. நெருக்கடி எங்கு ஏற்படுகிறதோ அங்கு உடனடியாக தனது பிரசன்னத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் மரபைக் கொண்டிருகிறது. இத்தகைய வருகை தெளிவுபடுத்தும் செய்திகள் பல காணப்படுகின்றன.

ஒன்று கொழும்பு துறைமுக நகரம் அதன் மீதான சீனாவின் செல்வாக்கு நிரந்தரமானது என்பதை சீன பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் காட்டுகின்றது.



இலங்கையும் சீனாவும் அரசியல் பொருளாதார கலாசார விடயங்களில் மாத்திரமன்றி இராணுவ விடயங்களிலும் அதிக பரிமாற்றம் உடைய நாடுகள் என்பதை கடந்த இரு தசாப்த காலமாக அவதானிக்க முடிகிறது. அத்தகைய பரிணாமம் கொழும்பு துறைமுக நகர நெருக்கடிக்கு பின்பும் பலமானதாக அமையும் என்பதை மகா சங்கங்களுக்கும் எதிர் கட்சிகளுக்கும் மற்றும் பிராந்திய சர்வ தேச நாடுகளுக்கும் இலங்கை வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டு சீன இலங்கை உறவு இந்தியாவைக் கடந்து தனித்துவமானது என்பதையும் இராணுவ ரீதியான உத்திகளைக் கொண்டது என்பதையும் மறைமுகமாகத் தெரிவித்துள்ளது. அதாவது சீன இலங்கை நட்புறவே இந்தியாவின் தலையீட்டைத் தவிர்பதற்கு இராணுவ ரீதியான எல்லைக்குள் இலங்கை சீன நட்புறவு நகரும் என்பதை கோடிட்டுக் காட்டுகிறது. இந்தியா 'ரன்விஜய்' கப்பலை கொழும்பு துறைமுகத்திற்குள் *(14.04.2021)* நட்புறவின் அடிப்படையில் நகர்த்த சீனா அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் M.V. BBC Naples என்ற கப்பலை*(20.04.2021)* அணுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு நகர்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இரு கப்பல்களும் ஏதோ ஓர் அடிப்படையில் போர் முனைப்புக் கொண்டவை. அதனால் அதிக அரசியல் பெறுமானம் கொண்டவை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மூன்று இந்தியாவிற்கு எதிரான பலமான கூட்டு ஒன்றை தென்னாசியாவில் ஏற்படுத்துவதில் சீனா வெற்றி பெற்றுள்ளது. தெற்காசிய நாடுகளுடனான சீன வெளிவகார அமைச்சரின் உரையாடல் அதனையே காட்டுகின்றது. இந்தியாவை சூழ இருக்கும் அனைத்து நாடுகளும் இந்தியாவைத் தவிர சீனாவின் நட்பு நாடுகளாக மாறி இருப்பதோடு இந்தியா பின்பற்றிய தடுப்பூசி இராஜதந்திரத்தையும் சீனா முறியடித்தது (Vaccine Diplomacy) இந்தியா பாகிஸ்தான் தவிர்ந்த அனைத்து தென்னாசிய நாடுகளுக்கும் தடுப்பூசியை வழங்கிய போதும் இந்தியாவிற்கு நெருக்கடி ஏற்பட்ட போது பாகிஸ்தானைத் தவிர வேறு எந்தத் தெற்காசிய நாடும் இந்தியாவிற்கு உதவ முன்வராதது மட்டுமன்றி உதவ முடியாத நிலையிலும் காணப்படுகின்றன. ஆனால், பாகிஸ்தான் சில அறிவிப்புக்களை இந்தியாவிற்கு உதவப் போவதாக வெளிப்படுத்தியிருந்தது.

நான்கு பொருளாதார ரீதியில் கோவிட் - 19 இற்குப் பின்பான சூழல் உலகளாவிய ரீதியில் சீனாவிற்கே சாதக மானதாக உள்ளது. *2021*இல் நடந்து முடிந்த மூன்று மாதங்களில் சீன பொருளாதார வளர்ச்சி 18.3% உயர்ந் துள்ளது. இதனால் சீனாவுடனான முதலீடு வர்த்தக நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் பிற பிராந்தியங்களைப் போன்று தெற்காசிய பிராந்தியம் சீனாவுடன் முதலீட்டு உறவைப் பலப்படுத்த அதிகம் விரும்புகிறது. இத்தகைய உறவைப் பலப்படுத்தும் உத்தியோடு சீன பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயம் விளங்கிக் கொள்ளப்படுதல் பொருத்தமானதாக அமையும்.

இத்தகைய பொறிமுறைக்கு ஊடாக சீன உறவை பலப்படுத்தும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை அதிக விளைவை ஏற்படுத்தும் என்பது அவதானிக்கப்பட வேண்டிய ஒன்று. ஏனெனில் சீனா நோக்கிய இலங்கை உறவு 2005-2015 வரை ஆட்சி நிகழ்ந்த போது இதே போன்று நெருக்கடியை சந்தித்துள்ளது. இந்தியா மற்றும் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளும் சீன எதிர்ப்பு வாதத்தை முதன்மைப்படுத்திக் கொண்டு இலங்கை மீது அதிக அழுத்தங்களைப் பிரயோகிக்க வாய்ப்பு உள்ளது. இலங்கையின் வெளியுறவுக் கொள்கை சீனாவுடன் மாத்திரம் மையப்படுத்தி உள்ளபோது இந்தியாவும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளும் அதிக முரண்பாட்டை கடைப்பிடிக்க ஆரம்பித்தன. அதனை ஜெனிவா விவகாரத்திலும் அதன் பின்பான கொழும்பு துறைமுக விவகாரத்திலும் எதிர்பார்க்கக் கூடியதாக உள்ளது. ஆனால், அத்தகைய போக்கு இலங்கைக்கு பாரிய சவாலானதாக அமையும். அத்தகைய சவால்களை ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் எதிர் கொள்ள முடியாத நிலையை உருவாக்கும்.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கை இந்தியாவைக் கையாளவும் பொருளாதார நலன்களை அடையவும் சீனாவை மையப்படுத்திய போக்கு காணப்பட்டாலும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளினதும் இந்தியாவின் தலையீடும் அதிக சந்தர்ப்பத்தை வழங்குவதாக தெரிகிறது. சுதந்திரத்திலிருந்து இலங்கை மேற்கு நாடுகளை நிராகரிக்காத வெளியுறவை கடைப்பிடித்து வந்தது. அதனாலேயே இந்திய எதிர்ப்பு வாதத்தையும் மேற்கு ஏற்றுக் கொண்டதோடு இந்தியாவிற்கும் முன்னாள் சோவியத் யூனியனிற்குமான உறவை மேற்கு பகைப் புலமாகவே கருதியது. இதனால் இலங்கை இந்திய எதிர்ப்புவாதத்தையும் மேற்குடனான நெருக்கத்தையும் தனது வெளியுறவுக் கருவாகக் கொண்டிருந்தது. அக்காலப் பகுதியில் இந்திய இலங்கை மீதான தலையீட்டையும் நெருக்கடியையும் மேற்கு தமதாக்கிக் கொண்டதும் இந்தியாவை நெருக்கடிக்குத் தள்ளியதும் இலங்கையைப் பாதுகாக்கும் பொறி முறையையும் மேற்கு கடைப்பிடித்து வந்தது. இதனால், இலங்கையின் வெளியுறவு ஆரோக்கியமானதாகவும் சுமூகமானதாகவும் அமைந்தது. ஆனால் தற்போது சீனா மீதான மேற்கு எதிர்ப்பு வாதமும் இந்திய எதிர்ப்பு வாதமும் இலங்கை மீதான எதிர்ப்பு வாதமாக மாறியுள்ளது. இலங்கை சீன நட்புறவு இந்திய மேற்கு பகைப்புலத்தினால் கட்டமைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி இந்தியாவின் புவிசார் அரசியலுக்குள்ளும் இந்தோ பசுபிக் தந்திரோபாயத்தின் மையப் பகுதியிலும் இலங்கை காணப்படுவதனால் அதன் மீதான மேற்கினதும் இந்தியாவினதும் பார்வை தனித்துவமானதாகும்.

எனவே சீன பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயம் சீனா நோக்கிய இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் வளர்ச்சி நிலையை காட்டுகிறது. இது இலங்கையின் ஆட்சி முறைமைக்கும் கட்டமைப்புக்கும் இராஜதந்திர ரீதியான பெறுமானதை கொடுக்கத் தவறுவதோடு எதிர்கால நெருக்கடிக்கு வழிவகுக்கும். ஆனால், கோவிட் 19இன் தாக்குதல் சீன பொருளாதாரத்தின் செழிப்பு மேற்கினதும் இந்தியாவினதும் உலகளாவிய மற்றும் பிராந்திய ஆதிக்கத்தை நெருக்கடிக்கு உள்ளாக்குமாயின் சீன இலங்கை உறவின் தனித்துவம் இலங்கையின் ஆட்சித் துறையின் அதிகாரத்தையும் எதிர்காலத்தையும் தக்கவைப்பதாக அமையும். இந்தியா இலங்கையை கையாளும் தன்மையை அவதானிக்கும் போது பின்பற்றும் பலவீனங்கள் அதனையே வெளிப்படுத்துகின்றன.

நன்றி : அருவி



33. 1 தொடக்கம் 20 வரையான எண்களைக் கூட்டும் போது வரும் தொகை யாது?

1. 180 2. 210 3. 240

34. 432 ✻ 6 = 8 # 9 என்னும் கணிதத் தொடர்பை அவதானித்து # ✻ என்னும் குறியீடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இரு கணிதச் செய்கைகளையும் முறையே கொண்ட விடை

1. X, ÷ 2. -, × 3. ÷, X

35. குறித்த ஒரு வருடத்தின் மார்ச் 23 ஆம் திகதி சனிக்கிழமை எனின் அவ்வருடத்தின் ஒக்டோபர் 17 ஆம் திகதி என்ன நாளாக வரும்

1. வெள்ளி 2. புதன் 3. வியாழன்

* மொனிஷா, அன்ரனி, அஸ்வின் ஆகிய நண்பர்கள் முத்திரை சேகரிப்போர் ஆவார்கள்.


* மூவரிடமும் தற்போது 146 முத்திரைகள் உள்ளன.
* ஒவ்வொருவரிடமும் 42 இற்கு மேற்பட்ட முத்திரைகள் உள்ளன.
* ஒவ்வொருவரிடமும் இரட்டை எண்களின் எண்ணிக்கையில் முத்திரைகள் உள்ளன.
* மூவரிடமும் உள்ள முத்திரைகள் சமனானவை அன்று

36. மேலுள்ள தகவல்களின் படி அன்ரனியிடம் 48 முத்திரைகள் இருப்பின் மொனிஷாவிடம் இருக்கக்கூடிய முத்திரைகளின் எண்ணிக்கை

1. 50 2. 38 3. 47

37. ஒரு விளையாட்டு எண் பெட்டியினுள் இலக்கம் 7 அச்சிடப்பட்ட மாபிள்களும் இலக்கம் 9 அச்சிடப்பட்ட மாபிள்களுமாக 17 மாபிள்கள் மொத்தமாக இருந்தன. இவ்விலக்கங்களின் கூட்டுத்தொகை 135 எனின் இலக்கம் 9 மாபிள்கள் எத்தனை அதனுள் இருந்திருக்கும்?

1. 5 2. 9 3. 8





38. இவர்களில் மிக நீண்ட தூரம் பயணம் செய்தவர் யார்?


1. கரன் 2. தரன் 3. பாபு

39. தரன் தனது வீடு நோக்கிச் செல்லும் போது வலது பக்கம் திரும்பிய தடவைகளின் எண்ணிக்கையையும் பாபு தனது வீடு நோக்கிச் செல்லும் போது இடது பக்கம் திரும்பிய தடவைகளின் எண்ணிக்கையையும் முறையே கொண்ட விடையைத் தெரிவு செய்க.

1. 3, 3 2. 4, 3 3. 3, 4

40. 

மேலுள்ள உருக்களை வளையக்கூடிய அட்டை ஒன்றில் இதனை வரைந்து வெட்டி எடுத்து வட்டவடிவமாக வளைத்து ஒட்டப்படுகின்ற போது ✻ இற்கு எதிராக இருக்கும் உரு வடிவம் யாதாக இருக்கும்.

1.  2.  3. 

01) பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

மக்கள் தத்தம் அன்றாடக் கடமைகளை முடித்து விட்டுக் களைத்திருக்கும் வேளையிலேயே தாம் மன அமைதி பெறவும், ஆறுதலடைவதற்கும் அண்மையிலே காணப்படுகின்ற பூங்காக்களை நாடிச் செல்வார்கள். இப்பூங்காக்கள் அவர்களது மனதிற்குக் குதூகலத்தையும், ஆறுதலையும் அளிக்கும். மேலும் உங்களைப் போன்ற சிறுவர்கள் விளையாடி மகிழ்ந்திருப்பதற்கும் பூங்காக்கள் உதவுகின்றன. பூங்காக்கள் எமது பொதுச் சொத்துக்கள் என்ற எண்ணம் எமக்கு எப்போதும் இருத்தல் வேண்டும்.

✻ கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. வேலை செய்து களைப்படைந்த மக்கள் மன அமைதி பெறவும் ஆறுதலடைவதற்கும் செல்லும் இடம் எது?
..........................................................
2. எமக்கு எப்போதும் இருக்க வேண்டிய எண்ணம் எது எனக் கூறப்படுகின்றது?
..........................................................
3. பூங்கா என்பதைப் பிரித்து எழுதுக?
..........................................................
4. 'செய்மை' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.
..........................................................
5. கீழ்க்கால், விசிறி என்பன இடம்பெறும் ஒரு பன்மை வினைச்சொல்லை பந்தியிலிருந்து தெரிந் தெடுத்து எழுதுக.
..........................................................
6. உயர்திணை, படர்க்கை, பன்மைப் பெயர்சொல் ஒன்றைத் தெரிந்தெடுத்து எழுதுக.
..........................................................

02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.

1. உடலுக்கு சக்தி தரும் உணவுகளில் ........................ (எண்ணை / எண்ணெய்) வகையான உணவுகளும் அடங்கும்.
2. நாம் இளநீர் போன்ற ........................ (பாண / பான) வகைகளை அருந்துதல் வேண்டும்.
3. தலைக்கு ........................ (சிகைக்காய் / சீயாக்காய்) தேய்த்துக் குளிப்பது உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

03) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கூட்டில் எழுதுக.

1. மான்கள் கூட்டம் கூட்டமாகச் ........................ (சென்றன / சென்றது)
2. சந்தையில் சனக்கூட்டம் ........................ (நிறைந்திருந்தன / நிறைந்திருந்தது)
3. கண்ணன் கூறியதை அனைத்து மாணவர்களும் ........................ (கேட்டான் / கேட்டனர்)
4. ........................ (பத்திரிகை / பத்திரிகைகள்) மாணவர்களுக்கு மட்டுமன்றி சகலருக்கும் பயன்படுகின்றன.

# கேரள கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட நால்வர் கைது!

கொழும்பு, மே 09.
தலங்கம - மாலபே பகுதியில் மகிழுந்தில் ஒரு தொகை கேரள கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் அவர்கள் கைது செய்யப்பட்டதாக காவல்துறை ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.
இதன்போது சந்தேகநபர்களிடம் இருந்த 4 கிலோ கிராம் கேரள கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது.
இதையடுத்து அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பாதுக்க - கலகெதர பகுதியில் 8 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் மேலும் இரண்டு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அத்துடன், அவர்களிடம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 32 கிலோ கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ)

# இலங்கைக்குள்ளும் ஊடுருவியது இந்தியாவில் பரவும் புதிய வைரஸ்

## தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஒருவரிடம் அடையாளம் என்கிறார் சந்திம ஜீவந்தர



**கொழும்பு, மே 09**
**இந்தியாவில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றிய ஒருவர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.**

இந்தியாவில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்றும் அவர் கூறினார்.
வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து, தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஒருவரிடம் இந்தியாவில் பரவும் புதிய வகை வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளது. பி.1.617 என்ற வைரஸே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 42 பஸ்களுக்கு அபராதம் விதிப்பு

கொழும்பு, மே 09
மத்திய மாகாணத்தில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 42 பஸ்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
கடந்த நாட்களில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்று காரணமாக பஸ்களில் மட்டுப்படுத்தப்பட்ட பயணிகள், சமூக இடைவெளி, முகக்கவசம் அணிந்திருத்தல் போன்ற சுகாதார விதிமுறைகளைப் பேணவேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.
எனினும், இந்த விதிகளை மீறிய 42 பஸ்கள் விசேட பொலிஸ் பிரிவால் கண்டுபிடிக்கப்பட்டது.
பஸ்களின் உரிமையாளர்கள் மூன்று நாட்களில் ரூபா 4 ஆயிரத்து 200 ரூபா அபராதப் பணம் செலுத்த வேண்டும் எனத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
கண்டியில் இருந்து புறநகர்ப் பகுதிகளுக்குச் செல்லும் பஸ்களில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறி பயணிகள் அழைத்துச் செல்லப்படுகின்றனர் என்று செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
தெல்தொட்ட, ரிக்கிலகஸ்கட, பதியபெலல்ல, திகன, ஹதரலியத்த, ரங்கல, பொத்தபிட்டிய மற்றும் ரெட்டியாகாமா உள்ளிட்ட 42 பஸ்களுக்கே அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ)

# நாட்டின் பல பிரதேசங்களுக்கும் பரவியுள்ளது பிரிட்டன் வைரஸ்!

கொழும்பு, மே 09
பிரிட்டனின் கென்ட் பிராந்தியத்தில் அடையாளம் காணப்பட்ட B.1.1.7 என்ற திரிபடைந்த கொரோனா வைரஸ் இலங்கையின் பல பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.
கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்கள், ஹோமாகம, பொரலஸ்கமுவ ஆகிய பகுதிகளில் குறித்த வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
குருநாகல் மாவட்டத்தில் பொல்பிதிகம, குளியாப்பிட்டிய, நிக்கரடிவெட்டிய, கனேவத்த, அம்பன்பொல, கிரிஉல்ல, பன்னல மற்றும் வாரியபொல ஆகிய பகுதிகளிலும், களுத்துறை மாவட்டத்தில் அகலவத்த, பிம்புர, பாணந்துறை மற்றும் பண்டாரகம ஆகிய பகுதிகளிலும், கண்டி மாவட்டத்தில் படுவஸ்நுவர, கண்டி மற்றும் ஹிங்குரங்கொடை ஆகிய பகுதிகளிலும், பொலனறுவை மாவட்டத்தில் மெதிரிகிரிய மற்றும் மன்னார் நகர எல்லைப் பகுதிகளிலும் இவ்வாறு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் மருத்துவர் சந்திம ஜீவந்தர மேலும் கூறினார். (இ)

# சமையல் தேங்காய் எண்ணெயுடன் வேறு எண்ணெய் சேர்ப்பதற்கு தடை

## வெளிவந்தது விசேட வர்த்தமானி

சமையல் வேலைகளுக்குப் பயன்படுத்தும் தேங்காய் எண்ணெயுடன் வேறு எண்ணெய் வகைகளைச் சேர்ப்பதை நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தடை செய்துள்ளது.
இலங்கையின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் கீழ் இவ்வாறு தடை செய்து விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.
போத்தல்களில், பொதிகளில் அல்லது கொள்கலன்களில் மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பனை செய்யப்படும் சமையல் தேங்காய் எண்ணெய், வேறு எண்ணெய் வகைகளின் சேர்க்கை அற்றதாக இருக்க வேண்டும் என்று குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அனைத்து இறக்குமதியாளர்கள், சுத்திகரிப்பாளர்கள், உற்பத்தியாளர்கள், கையிருப்பாளர்கள், பொதியிடுபவர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.
சமையல் தேங்காய் எண்ணெய், வேறு எண்ணெய் வகைகளின் சேர்க்கை அற்றதாக இருக்க வேண்டும் என்ற சட்டம் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றது என்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# மின்னல் தாக்கி இளம் தாய் பலி

ஆனமடுவ, தோனிகலப் பகுதியில் மின்னல் தாக்கி பெண்ணொருவர் உயிரிழந்தார். அதேவேளை, மற்றொரு பெண் ஆனமடுவ வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 26 வயதுடைய இளம் தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.
அதிக மழையுடனான காலநிலையின்போது குறித்த பெண் தேங்காய் உறிப்பதற்காக இரும்புக் கம்பியொன்றைப் பயன்படுத்தியுள்ளார்.
இதன்போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. அருகிலிருந்த பெண்ணும் குறித்த மின்னல் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளார். (இ)

# 'மைலோ' பாலில் கொக்கைன் போதைப்பொருள் கலந்து கொள்ளையில் ஈடுபட்டு வந்த புத்தூர்வாசி கைது

யாழ்ப்பாணம், மே 09
மைலோ குளிர் பாலில் கொக்கைன் போதைப்பொருள் கலந்து கொள்ளையில் ஈடுபட்டு வந்த புத்தூர் வாசி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மானிப்பாயில் சில நாட்களுக்கு முன்பு சலவைத் தொழிலகம் ஒன்றில் உரிமையாளருக்கு மைலோ பால் வழங்கி அவரை மயக்கி 2 பவுண் தங்க நகையை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.
அத்துடன், மானிப்பாயில் ஓட்டோ சாரதி ஒருவரை வாடகைக்கு அமர்த்தி கைதடிக்குச் சென்ற ஒருவர் மைலோ பால் பைக்கற்றை வழங்கியுள்ளார். பைக்கெற்றின் வாய் பகுதியை வெட்டி வழங்கியதால் ஓட்டோ சாரதி அதனை ஏற்க மறுத்தபோது, ஸ்ரோ இல்லாததால் அவ்வாறு செய்ததாக குறித்த நபர் தெரிவிக்க, அதனை நம்பி சாரதி பருகிய நிலையில் மயக்கமடைந்துள்ளார்.
அதன்போது ஓட்டோ சாரதி அணிந்திருந்த மோதிரம் உட்பட 2 பவுண் தங்க நகையைக் கொள்ளையிட்டுக் கொண்டு குறித்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.
அத்துடன் ஓட்டோ சாரதியின் கழுத்தில் காயம் ஏற்பட்டிருந்த நிலையில், கைதடியைச் சேர்ந்தவர்களால் அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பிலும் வைத்தியசாலை பொலிஸார் ஊடாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
இது தொடர்பான விசாரணை யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சர் லியனகேவினால் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியிடம் வழங்கப்பட்டது.
சம்பவங்கள் இடம்பெற்ற இடங்களில் சி.சி.ரி.வி. பதிவைப் பெற்ற யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு புத்தூரைச் சேர்ந்த ஒருவரை நேற்றுமுன்தினம் கைதுசெய்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தினர்.
சந்தேகநபரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தில் தான் கொக்கைன் போதைப்பொருளை மைலோ பாலில் கலந்து வழங்கி கொள்ளையில் ஈடுபட்டு வந்தார் என்று தெரிவித்துள்ளார். (இ)

ஈழநாடு



● பாரிஸிலிருந்து குமாரதாஸன்



# அடுத்த அங்கெலா மெர்கல் அன்னலினாவா?

தொற்று நோய்க்குப் பிந்திய உலகில் சுற்றுச் சூழல் மீதான கரிசனை பரவலாக அதிகரித்திருக்கிறது. இளவயதினரது கவனம் சூழல் மீது திரும்புவதும் தெரிகிறது. தேர்தல் அரசியலிலும் அது எதிரொலிக்கிறது. பிரான்ஸில் கடந்த ஆண்டு நகரசபைத் தேர்தல்களில் பசுமைக் கட்சிகள் திடீரென முன்னரங்குக்கு வந்தன.

அடுத்த மாதம் நடைபெறப்போகின்ற பிராந்தியத் தேர்தல்களிலும் சூழலியல் கட்சிகளோடு கூட்டணி அமைத்தாலேயே வெல்லலாம் என்பது பிரதான கட்சிகளின் உத்தியாக உள்ளது.

வருகை ஜேர்மனியின் அரசியல் அரங்குகளில் அதிர்வுகளை ஏற்படுத்தி உள்ளது. பழமைவாதிகளா பசுமைவாதிகளா என்ற பரபரப்பான ஒரு திசையை நோக்கித் தேர்தல் களம் விரிகிறது. சுமார் 16 வருடங்களுக்குப் பிறகு வெற்றிடமாகின்ற அங்கெலா மெர்கலின் இடத்தை நிரப்பக் கூடிய பொருத்தமான பெண் தலைவியாக அன்னலினாவை அரசியல் நோக்கர்கள்

ஐரோப்பாவின் சக்தி மிக்க நாடான ஜேர்மனியில் அரசுத் தலைவர் தேர்தல் செப்ரெம்பரில் நடக்கிறது. உலகின் வலிமை மிக்க பெண்களில் ஒருவரான அங்கெலா மெர்கல் இல்லாமல் நடைபெறப்போகின்ற முதலாவது தேர்தல் அது.ஆனால் அங்கு “அடுத்த அங்கெலா மெர்கல்“ என அழைக்கப்படும் இளம் பெண் ஒருவர் களத்துக்கு வந்திருக்கிறார்.

இதுவரை அரசுத் தலைவர் பதவிக்கு தனியே போட்டியிடாது கூட்டணி வகித்துவந்த பிரபல பசுமைக் கட்சி இந்தத் தடவை தனக்கான தனி வேட்பாளரை அறிவித்திருக்கிறது. நாற்பது வயதான அன்னலினா பேர்பாக் (Annalena Baerbock) பசுமைக் கட்சியின் அரசுத் தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கிறார். அங்கெலா மெர்கலின் மைய வலதுசாரி கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிக் கூட்டணியை விட (Christian Democratic Union-Christian Social Union) பசுமைக் கட்சியின் இளம் வேட்பாளர் வெற்றிவாய்ப்பில் முன்னிலை வகிக்கிறார் என்று முக்கிய கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன.

தேர்தலுக்கு இன்னமும் ஐந்து மாதங்களே இருக்கும் நிலையில் அன்னலினாவின் கருதுகின்றனர். ”எல்லாக் கட்சிகளும் அவரைத் தங்களது பிரதான அரசியல் எதிராளியாகப் பார்க்கின்றன” என்கிறார் ஓர் ஆய்வாளர்.

பசுமைப் பொருளாதாரம் (greener economy) சீனா, ரஷ்யாவுக்கு எதிரான கடினமான வெளிவிவகாரக் கொள்கை நிலைப்பாடு ஆகிய விடயங்களைத் தனது அரசியல் திட்டங்களில் கொண்டவர் அன்னலினா. அவருக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதை உறுதிப்படுத்துகின்ற ஒரு கருத்துக் கணிப்பை வெளியிட்டிருக்கும் டீடைன செய்தி ஏஜென்சி, ”ஜேர்மனியர்கள் ஒரு மாற்றத்துக்கான மனநிலையில் உள்ளனர்” என்று தெரிவித்திருக்கிறது.

ஆனால், போதிய அரசியல் முன் அனுபவம் இல்லாத அன்னலினாவின் பசுமைக் கட்சி பற்றிய இந்த மதிப்பீடுகள் வெறும் ஊடகங்களின் மிகைப்படுத்தல் மட்டுமே என்று விமர்சிக்கின்ற சிலர், மக்களுக்கான அவரின் தேர்தல் உறுதிமொழிகள் எவை என்பது தெரிய வந்த பின்னரே அவருக்கான வெற்றிவாய்பைச் சரிவர மதிப்பிட முடியும் என்று கூறுகின்றனர்.

எனினும் அரசுத் தலைவர் பதவியில் அவர் தோற்றாலும் அடுத்த அரசை நிறுவுவதில் முக்கிய கிங் மேக்கராக இருப்பார். அங்கேலாவுக்குப் பிறகு சக்தி மிக்க தலைவராகவும் மாறுவார் என்று வேறு சிலர் எதிர்வு கூறுகின்றனர்.

40 வயதான இளம் தாய் அன்னலினா ஒரு ஜிம்னாஸ்டிக் (வசயஅிழடைைெப) வீராங்கனை ஆவார். ஹனோவரில் அரசியல் கல்வி கற்ற அவர் லண்டன் பொருளாதாரக் கல்லூரியில் (டுழனெழெ ளுஉாழழட ழக நுஉழழெஅஉைள) சட்டம் மற்றும் அரசியலில் பட்டம் பெற்றவர். 2005 ஆம் ஆண்டு ஜேர்மனியின் பசுமைக் கட்சியில் (புசநநளெ) இணைந்த அவர், 2013இல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி இருந்தார்.

2005 ஆம் ஆண்டு தனது 51 ஆவது வயதில் அரசுத் தலைவர் பதவிக்கு வந்தஅங்கெலா மெர்கல் அம்மையாருக்குப் பின்னர் பரவலாகக் கவனத்தை ஈர்த்துள்ள அன்னலினா, அடுத்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டால் உலகப் போருக்குப் பின் ஜேர்மனியை ஆளப்போகின்ற வயதில் குறைந்த தலைவராக அவரே இருப்பார். ■

# விண்வெளி சென்று திரும்பிய “வைன்”!

## அதன் தரம், சுவை அறிய ஆராய்ச்சி



பிரான்ஸின் “போர்தோ வைன்” (Bordeaux wine) உலகப் பிரசித்தி பெற்றது. அதன் சுவைக்கும் தரத்துக்கும் என்று தனியான அடையாளம் உண்டு. இயற்கையோடு இணைந்து நொதிக்கும் திராட்சை வைனே அதன் சிறந்த பயனை தருகிறது. ஆனால் பூமியின் பருவநிலை மாறுதல்கள் வைன் தயாரிப்பிலும் அதன் குணநலன்களிலும் தாக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளன.வெப்பநிலை அதிகரிப்பு வைன் தொழில் துறையைப் பெரிதும் பாதித்து வருகிறது. அண்மையில் பருவம் தவறி வந்த கடும் பனி காரணமாக திராட்சைக் குருத்துகள் கருகின.

பருவநிலை மாற்றத்தின் இந்த சவால் களை எதிர்கொள்ள மாற்று வழிமுறை கள் என்ன?

“பூமிக்கு அப்பாற்பட்ட விவசாயம்” (extra-terrestrial agriculture) எனப்படுகின்ற எதிர்கால விவசாய விரிவாக்கத் திட்டத்தின் கீழ் வைன் தயாரிப்பையும் திராட்சைச் செய்கையையும் விண்வெளி யில் மேற்கொள்ள முடியுமா என்பதை அறியும் ஒரு முயற்சியாக ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

பூமிக்கு முற்றிலும் மாறுபட்ட ஓர் இயற்கைச் சூழ்நிலையில் வைனை நீண்ட நாள் புளிக்க வைத்துப் பார்த்தால் என்ன? இவ்வாறு அதன் தரம், சுவையை சோதித்து அறிகின்ற ஒரு முயற்சியில் பிரான்ஸின் வைன் தயாரிப்பாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் கூட்டாக இறங்கி உள்ளனர். அத்துடன் திராட்சைச் செடிகளின் குருத்துக்களை விண் வெளியில் பாதுகாத்து வளர்க்க முடியுமா என்பதும் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பி அங்கு சுமார் 14 மாதகாலம் பாதுகாக்கப்பட்ட வைன் போத்தல்கள் மீண்டும் பூமிக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

பிரபல வைன் வகையான 'Pétrus 2000' உட்பட 12 வைன் போத்தல்கள் வேறு பல பொருள்களுடன் சேர்த்து கடந்த 2019 இல் விண்வெளி நிலையத்துக்கு அனுப்பி அங்கு பேணிவைக்கப்பட்டன. வைனின் சுவையை மதிப்பிடுகின்ற நிபுணர்கள் 12 பேர் விண்வெளி வைனை சுவைத்துப் பார்த்துள்ளனர். அது தரத்திலும் நிறத்திலும் மேம்பட்டிருப்பதை ஆரம்ப ஆய்வுகள் வெளிப்படுத்தி உள்ளன. விண்வெளியில் இருந்து கொண்டு வரப்பட்ட'Pétrus 2000' வைன் போத்தலை ஏலத்தில் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை யாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ■

# அருந்ததி

இணைய திருமண சேவை

**+94 777 164 524**
**www.arunthathee.com**

## மணமகன் விபரம்

| | | |
|---|---|---|
| **15829\|வே\|1989**<br>திருகோணமலை\|இந்து<br>168 செ.மீ \|பட்டதாரி\|AU<br>Registered Migration Agent<br>அத்தம் (கன்னி) | **18070\|கோ\|1989**<br>கரவெட்டி \|இந்து\|Canada<br>168 செ.மீ \|சூ.செ:05<br>Surveyor\|பட்டதாரி<br>மிருகசீரிடம் (ரிஷபம்) | **18454\|வே\|1990**<br>காரைநகர்\|இந்து\|Sg<br>183 செ.மீ\|செ.வ் : 01<br>System Engineer\|பட்டதாரி<br>உத்திரட்டாதி (மீனம்) |
| **17775\|வே\|1990**<br>சாவகச்சேரி\|Finland<br>180 செ.மீ \|பட்டதாரி<br>Engineer<br>அஸ்வினி (மேடம்) | **15991\|வி\|1990**<br>புங்குடுதீவு\|இந்து<br>167 செ.மீ \|France<br>Hotel Chef\|உயர்தரம்<br>உத்தரம் (கன்னி) | **17880\|வே\|1994**<br>கல்வியங்காடு\|இந்து\|UK<br>176 செ.மீ\|பட்டதாரி செ: 7<br>Accountant<br>திருவோணம் (மகரம்) |
| **17678\|வே\|1990**<br>பருத்தித்துறை\|இந்து\|Ae<br>179 செ.மீ\| செ: 07<br>Qty Surveyor\|பட்டதாரி<br>கேட்டை (விருச்சிகம்) | **18118\|வே\|1990**<br>அச்செழு \|இந்து\|UK<br>182 செ.மீ \|டிப்ளோமா<br>Company Manager<br>மூலம் (தனுசு) | **16132\|வே\|1990**<br>இணுவில்\|இந்து\|AU<br>168 செ.மீ\|செ.வ் :08<br>Qty Surveyor\|பட்டதாரி<br>அனுஷம் (விருச்சிகம்) |
| **16517\|வி\|1990**<br>கொக்குவில்\|இந்து\|US<br>175 செ.மீ \|செவ்: 07<br>Cashier\|டிப்ளோமா<br>உத்தராடம் (மகரம்) | **17790\|வே+கு\|1990**<br>பருத்தித்துறை\|இந்து\|AU<br>172 செ.மீ \| பட்டதாரி<br>Medical Laboratory Asst<br>ஆய்யிவியம் (கடகம்) | **15982\|வே\|1990**<br>கரவெட்டி\|இந்து\|Canada<br>175 செ.மீ\|உயர்தரம்<br>HVAC Technician<br>ரேவதி (மீனம்) |
| **16105\|வே\|1990**<br>கரவெட்டி\|இந்து<br>179 செ.மீ \|France<br>Business Analyst\|பட்டதாரி<br>புனர்பூசம் (மிதுனம்) | **18388\|வே \|1991**<br>நல்லூர்\|இந்து\|AU<br>Engineer\|பட்டதாரி<br>166 செ.மீ<br>திருவாதிரை (மிதுனம்) | **16406\|வே\|1991**<br>வயவிளான்\|இந்து\|Swiss<br>180 செ.மீ<br>Staff\|உயர்தரம்<br>பூராடம் (தனுசு) |
| **15763\|வே\|1991**<br>கொக்குவில்\|இந்து<br>172 செ.மீ \|செவ் : 12\|Germany<br>Restaurant Staff\|உயர்தரம்<br>ஆய்யிலியம் (கடகம்) | **15811\|வே\|1991**<br>திருகோணமலை\|இந்து\|Fr<br>173 செ.மீ \|செவ் :02<br>Staff\|டிப்ளோமா<br>மூலம் (தனுசு) | **17612\|வே\|1991**<br>கரவெட்டி\|இந்து\|US<br>174 செ.மீ\|சூ.செ : 05<br>Assistant Manager\|உயர்தரம்<br>கேட்டை (விருச்சிகம்) |
| **16532\|வே\|1991**<br>மானிப்பாய்\|இந்து\|AU<br>165 செ.மீ \|செவ் : 07<br>PHD Researcher\|பட்டதாரி<br>அனுஷம் (விருச்சிகம்) | **16937\|வே\|1991**<br>அல்லாரை\|இந்து\|AU<br>178 செ.மீ\|செவ் : 07<br>Staff\|உயர்தரம்<br>உத்தரம் (கன்னி) | **17324\|கு\|1992**<br>பொலிகண்டி\|இந்து\|UK<br>167 செ.மீ\|செ.வ் : 08<br>Test Engineer\|பட்டதாரி<br>கார்த்திகை (மேடம்) |
| **18756\|வே\|1992**<br>புங்குடுதீவு\|இந்து\|Swiss<br>172 செ.மீ \|செவ் :08<br>Staff at Reataurant \|உயர்தரம்<br>அவிட்டம் (கும்பம்) | **17582\|வே\|1992**<br>காரைநகர்\|இந்து\|Sg<br>165 செ.மீ \|செவ் :12<br>Senior Software\|பட்டதாரி<br>உத்திரட்டாதி (மீனம்) | **17384\|வே\|1992**<br>இணுவில்\|இந்து\|Finland<br>161 செ.மீ\|செவ் : 01<br>Staff\|உயர்தரம்<br>பூராடம் (தனுசு) |

## மணமகள் விபரம்

| | | |
|---|---|---|
| **17531\|வே\|1974**<br>சாவகச்சேரி \|இந்து\|Germony<br>152 செ.மீ \|Widowed<br>Receptionist\| உயர்தரம்<br>பூரட்டாதி (கும்பம்) \|செ :02 | **16754\|வே\|1984**<br>திருகோணமலை\|இந்து\|Ca<br>155 செ.மீ\|பட்டதாரி<br>Analysisst in BioAnalysis<br>பூரம் (சிம்மம்) \| Divorced | **18196\|வே\|1985**<br>அச்சுவேலி\|இந்து\| Canada<br>153 செ.மீ \|பட்டதாரி<br>Coordinator at Finance Department<br>அய்யிவிலியம் (கடகம்) |
| **17492\|வே\|1985**<br>சங்கானை\|இந்து\|Germanoy<br>158 செ.மீ \|சூ.செ :01<br>Engineer\|பட்டதாரி<br>ஆய்யிலியம் (கடகம்) | **17829\|வே\|1985**<br>உடுவில்\|இந்து\|Swiss<br>172 செ.மீ<br>Engineer\|பட்டதாரி<br>பூரட்டாதி (கும்பம்) | **19008\|கோ\|1992**<br>கொடிகாமம்\|இந்து\|UK<br>153 செ.மீ \|பட்டதாரி<br>Finance Manager<br>மிருகசீரிடம் (ரிஷபம்) செ:02 |
| **17489\|வே\|1989**<br>புன்னாலை\|இந்து\|Swiss<br>169 செ.மீ \|பட்டதாரி<br>Accountant<br>உத்தரம் (சிம்மம்) | **18025\|வே\|1989**<br>கொக்குவில்\|இந்து\|UK<br>168 செ.மீ<br>Accountant\|பட்டதாரி<br>பூரம் (சிம்மம்) | **18828\|வே\|1990**<br>மயிலிட்டி\|இந்து\|Canada<br>Immigration Officer<br>திருவாதிரை (மிதுனம்)<br>பட்டதாரி\| 160 செ.மீ |
| **15745\|வே\|1990**<br>கந்தர்மடம்\|இந்து\|Sg<br>155 செ.மீ \|பட்டதாரி<br>Project Engineer<br>அஸ்வினி (மேடம்) | **17153\|வே\|1990**<br>அரியாலை\|இந்து\|France<br>158 செ.மீ \|பட்டதாரி<br>Healthcare Research Manager<br>மூலம் (தனுசு) | **17844\|வே\|1992**<br>கொக்குவில்\|இந்து\|Uk<br>162செ.மீ\|பட்டதாரி<br>IT Systems Analysist<br>சதயம் (கும்பம்) |
| **17787\|கு\|1992**<br>தொல்லிப்பளை\|இந்து\|UK<br>168 செ.மீ \|Bio- Rad<br>பட்டதாரி\|செவ் :07<br>மிருகசீரிடம் (ரிஷபம்) | **17636\|வே\|1992**<br>புங்குடுதீவு\|இந்து\|UK<br>155 செ.மீ \|செவ் :04<br>Trainee Solictor\|பட்டதாரி<br>மூலம் (தனுசு) | **17486\|வே\|1993**<br>மட்டுவில்\|இந்து\|Swiss<br>176 செ.மீ\|செவ் : 07<br>Administration Officer<br>கார்த்திகை (மேடம்) |
| **18623\|வே\|1993**<br>ஏளாலை\|இந்து\|Canada<br>158 செ.மீ \|உயர்தரம்<br>Unemployed<br>சித்திரை (கன்னி) | **16985\|வே\|1993**<br>நெல்லியடி\|இந்து\|Uk<br>162 செ.மீ \|பட்டதாரி<br>Uk Civil Service<br>உத்தரம் (சிம்மம்) | **18154\|வே\|1993**<br>சாவகச்சேரி\|இந்து \|Uk<br>156 செ.மீ \|பட்டதாரி<br>சுவாதி (துலாம்)<br>செவ் : 07 |
| **17441\|ப\|1994**<br>ஏளாலை \|இந்து<br>175 செ.மீ \|பட்டதாரி<br>Accountant\|சூ.செ : 04<br>பூரம் (சிம்மம்)\| Denmark | **15985\|வே\|1994**<br>கரவெட்டி\|இந்து\|Canada<br>153 செ.மீ\|சூ.செ : 06<br>Book Keeper<br>திருவாதிரை (மிதுனம்) | **17778\|வே\|1994**<br>பருத்தித்துறை\|இந்து\|Swiss<br>155 செ.மீ\|செ.வ் : 08<br>Unemployed\|பட்டதாரி<br>சித்திரை (துலாம்) |
| **17087\|ந\|1995**<br>நீர்வேலி\|கிறிஸ்துவம் \|US<br>158 செ.மீ \|பட்டதாரி<br>அஸ்வினி (மேடம்)<br>செவ் : 01 | **17747\|1995**<br>யாழ்நகரம்\|கிறிஸ்துவம்\|US<br>152 செ.மீ \|பட்டதாரி<br>patient Coordinater | **18921\|வே\|1998**<br>கைதடி\|இந்து\|Germany<br>161செ.மீ\|சூ.செ : 07<br>Trainee\|அனுஷம்<br>(விருச்சிகம்)\|பட்டதாரி |

அக்ஷய திருதியை முன்னிட்டு

# சிறப்பு வரன் தேடல்

மே மாதம் 10ம் திகதி முதல் 15ம் திகதி வரை
யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு அலுவலகங்களில்

**இந்நிகழ்விற்கு ஜோதிடர் வருகை தரவுள்ளதால் உடனுக்குடன் ஜாதகப்பொருத்தம், ஜாதக ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்**

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு இலக்கத்தை (Profile No) Whatsapp 94777164524 இற்கு அனுப்பி குறித்த வரனின் முழுமையான விபரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.




**தற்பொழுது விற்பனையில்**

அரச, தனியார் தொழில் புரியும் உள்நாட்டு , வெளிநாட்டு 600 மணமக்கள் விபரங்களுடன் அருந்ததி திருமண இதழ் 23 இணையத்தில் வாசிக்க | www.rebrand.ly/i23

கல்முனை விவகாரத்தில்

# தமிழ் - முஸ்லிம் உறவை சீர்குலைக்கச் சிலர் சதி!

அம்பாறை பள்ளிவாசல்கள் சம்மேளனம் குற்றச்சாட்டு



அம்பாறை,மே9

கல்முனை விவகாரத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவைச் சீர்குலைக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளை, சுன்னத் வல் ஜமாஅத் என்பன இணைந்து நேற்று முன்தினம் கல்முனையில் நடத்திய ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளது.

கல்முனை விவகாரம் தொடர்பாக அனைத்து முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் எனவும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனையில் உள்ள மக்களின் பூர்வீகம், வரலாறு, எல்லைகள், கல்முனை வாழ் மக்களின் வாழ்வாதாரம், மக்களின் பாசப் பிணைப்பு என எதையும் அறியாத வெளிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்னும் சிலரும் கல்முனை தொடர்பாக பிழையான சித்திரிப்புக்களைப் பரப்பி வருகின்றனர் என்று அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் டாக்டர் எஸ்.எம். அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை என்பன முஸ்லிம்களுக்குச் சொந்தமானவை எனக் கூறியிருந்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில்தான் கிழக்கின் அதிக சுகாதாரத்துறை பணியாளர்கள் இருக்கின்றார்கள். அதில் இருக்கும் எல்லோரும் முஸ்லிம்கள் அல்லர். தமிழ், சிங்கள மக்களும் அதிகளவில் பணியாற்றுகிறார்கள்.

போர்க்காலத்தில் கல்முனையில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் அதிகமாக இருந்த போது, மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கே அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை உருவாக்கப்பட்டது.

அங்கு சிகிச்சை வழங்குவதிலும், சிகிச்சை பெறுவதிலும் மூவின மக்களும் அங்கம் வகிக்கின்றனர். அது தமிழ் மக்களுக்கு மனதுக்கு நெருக்கமான வைத்தியசாலையாகவும் அமைந்துள்ளது.

இதேபோன்றுதான், கல்முனை உப பிரதேச செயலக விவகாரமும். இவர்களின் இனவாத, பிரதேசவாத கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. எங்களின் தமிழ் - முஸ்லிம் உறவுகளைச் சீரழித்து குளிர்காய எடுக்கப்படும் அரசியல் முன்னெடுப்புக்களை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்" - என்றார். (இ)

# குறைந்தது 70 தாதியர்கள் கொரோனாவால் பாதிப்பு

கொழும்பு,மே9

இலங்கையில் புதிய கொரோனா கொத்தணியில் பல்வேறு பகுதிகளில் குறைந்தது 70 தாதியர்கள் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

திருகோணமலை மருத்துவமனையில் 17 தாதியர்கள், ராகம மருத்துவமனையில் 8 தாதியர்கள், கராப்பிட்டி மற்றும் கெகல்லே ஆகிய இடங்களில் தலா 4 தாதியர்கள் இவ்வாறு கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், அதிகரித்து வரும் கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் தாதியர்கள் குறைவளவான ஓய்வு நேரங்களை எடுத்துக்கொண்டு அதிகளவான நேரங்களில் பணிபுரியும் நிலைமை காணப்படுகின்றது எனவும் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (இ)

# திருமலையில் இதுவரை 18 கொரோனா சாவுகள்!

திருகோணமலை,மே9

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 18 பேர் கொரோனா வைரஸால் மரணித்தனர் என்று திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் 1,831 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும், அதிக மரணங்கள் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இடம்பெற்றுள்ளது எனவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் நேற்றுக் காலை 10 மணிக்கு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதியில் 07 மரணங்கள் பதிவாகியுள்ளன. உப்புவெளி பகுதியில் 06 மரணங்களும், மூதூரில் இரண்டு மரணங்களும், கந்தளாயில் இரண்டு மரணங்களும், கிண்ணியாவில் ஒரு மரணமும் பதிவாகியுள்ளன.

அத்துடன் இறுதியாக 24 மணித்தியாலங்களில் இரண்டு மரணங்கள் திருகோணமலை மற்றும் உப்புவெளி சுகாதார வைத்திய பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் காலை முதல் நேற்றுக் காலை 10 மணி வரைக்கும் 68 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதில் 18 பேர் திருகோணமலை நகர் பகுதியைச் சேர்ந்தவர்களாவர் என்று திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.ஜீ எம் கொஸ்தா தெரிவித்தார். (இ)

# கடத்தல் வழக்கில் இருந்து முத்துஹெட்டிகம விடுவிப்பு

கொழும்பு,மே9

நபர் ஒருவரைக் கடத்திச் சென்று உயிர் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கு தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிப்பதாக காலி மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ. ஜி. எஸ். நிஷங்கா உத்தரவிட்டார்.

முத்துஹெட்டிகம உட்பட இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ஐந்து சந்தேகநபர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியாததால் அவர்களை விடுவிப்பதாக நீதிபதி உத்தரவிட்டார். (இ)

# கொரோனா நோயாளர்களுக்காக 10 நாட்களில் 10 ஆயிரம் கட்டில்கள்

பஸில் ராஜபக்ஷ தகவல்

கொழும்பு,மே9

பத்து நாட்களுக்குள் பத்தாயிரம் கட்டில்கள் கொரோனா நோயாளர்களுக்காக சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சிறிசபாரத்தினம் நினைவேந்தல்: காணி உரிமையாளர் விடுவிப்பு

வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளரிடம் வாக்குமூலம்

யாழ்ப்பாணம்,மே9

நினைவேந்தலுக்கும் காணி உரிமையாளர்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என ரெலோவின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளரும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சென்று தெரிவித்ததையடுத்து சிறிசபாரத்தினத்தின் நினைவேந்தல் இடம்பெற்ற காணி உரிமையாளர் பொலிஸ் நெருக்குவாரங்களில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை தமிழீழ விடுதலை இயக்கத்தின் மறைந்த தலைவர் சிறிசபாரத்தினத்தின் 35 ஆவது நினைவு தினத்தை அவர் மறைந்த இடமான உரும்பிராய் தோட்ட வெளியில் அனுஷ்டித்தனர். ஒவ்வோர் ஆண்டும் அனுஷ்டிக்கப்படும் குறித்த இடம் தனியாருக்குச் சொந்தமான காணி ஆகும். எனினும், நினைவேந்தல் மேற்கொள்வதைத் தடைசெய்யும் முகமாக குறித்த தோட்டத்துக்குச் செல்லும் பாதைகள் அடைக்கப்படவேண்டும் என ஏற்கனவே காணி உரிமையாளர்களுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் கடந்த 5 ஆம் திகதி குறித்த இடம் சிரமதானம் மூலமாக சுத்திகரிப்பட்டதையடுத்து அழுத்தங்கள் காரணமாக காணி பராமரிப்பாளர்களால் அஞ்சலி நடைபெறும் இடம் வேலி மூலம் அடைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அடைக்கப்பட்டிருந்த இடத்தில் பாதை வடிவில் காணப்பட்ட இடத்தைத் திறந்து வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் அஞ்சலி செலுத்த சென்றிருந்தார்.

அதனைத் தொடர்ந்து அங்கு வருகை தந்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் குறித்த இடத்தில் அஞ்சலி செலுத்தினர். இந்நிலையில் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு குறித்த காணியின் பங்கைக் கொண்ட உள்நாட்டில் உள்ள பராமரிப்பாளர் அழைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

தொடர்ச்சியாக காணி பராமரிப்பாளர் இரு நாட்களாக பொலிஸ் நிலையத்துக்கு அலைக்கழிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் தவிசாளருக்குத் தொலைபேசி வாயிலாக தன் நிலைமையை அறிவித்தார். இதையடுத்து கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற தவிசாளர் நினைவேந்தல் விடயத்துக்கும் இவர்களுக்கும் எதுவித தொடர்பும் கிடையாது எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து காணிப் பராமரிப்பாளர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை, தனியார் காணிக்குள் நுழைந்து அஞ்சலித்தமை மற்றும் தனிமைப் படுத்தல் சட்டவிதிகளை மீறியமை தொடர்பாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷிடம் கோப்பாய் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்துள்ளனர். (இ)

## 1000 படுக்கை...

அத்துடன், பி.சி.ஆர். பரிசோதனையை நாளை திங்கட்கிழமை முதல் இரு மடங்காக அதிகரிப்பதற்கும் ஆலோசித்து இருக்கின்றோம்.

- இவ்வாறு தேசிய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் ( திட்டமிடல் பிரிவு ) மருத்துவர் ச.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள மூன்றாவது அலை அதாவது திரிவடைந்த வைரஸால் ஏற்படுகின்றது. இப்போது அயல் நாடுகளில்கூட இந்த திரிபடைந்த வைரஸ் வேகமாக பரவி வருகின்றது. 20 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கும் இந்த வைரஸ் தொற்று ஏற்படுகின்றது. ஆகவே இந்த வேகமாக பரவுகின்றதன் காரணமாக சுகாதார அமைச்சு பல முன்னேற்பாடு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன்படி, ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் சுகாதார அமைச்சரின் பணிப்பின் கீழ் இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர்கள் தற்பொழுது விஜயம் செய்துள்ளனர். இதனடிப்படையிலேயே நான் இன்று வடக்கு மாகாணத்துக்கு வந்தேன்.

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் தொற்று நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளேன். அத்தோடு தற்போதைய கொரோனா முன்னேற்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளேன்.

இராணுவத் தளபதியுடன் கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு சென்று அங்குள்ள நோயாளிகளின் பிரச்னைகள் குறித்து பேசியுள்ளோம். அவர்களின் பிரச்னைகளுக்கான தீர்வையும் வழங்கியுள்ளோம்.

வரும் நாட்களில் யாழ். மாவட்டத்தில் ஆயிரம் படுக்கைகளுடன் கூடிய சிகிச்சை நிலையம் ஒன்றை அமைக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம். இதேபோல கர்ப்பவதி தாய்மார்களுக்கு தொற்று ஏற்பட்டால் அவர்களுக்கு எவ்வாறு மருத்துவ சிகிச்சை வழங்குவது அதாவது சத்திர சிகிச்சை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்ந்துள்ளோம். இது தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருடனும் கலந்துரையாடியுள்ளோம்.

இதேபோல, யாழ். மாவட்டத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை நாளை திங்கட்கிழமை முதல் இரு மடங்காக அதிகரிக்கவும் ஆலோசித்துள்ளோம். எடுக்கப்படும் பி.சி.ஆர். மாதிரிகளை அந்த நாளிலோ அல்லது மறுநாளோ வெளியிடக்கூடிய ஏற்பாடுகளையும் செய்துள்ளோம்- என்றார். (ஐ-3)

## கொரோனா...

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

உலகம் எதிர்கொண்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நிலை மற்றும் இலங்கையின் சவால்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டன என்று எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா நெருக்கடியைச் சமாளிப்பதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குமாறு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பதில் பிரதிநிதியிடம் சஜித் பிரேமதாஸ இதன்போது வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா பரவல் மற்றும் உயிரிழப்புகளைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து வகையான ஒத்துழைப்புகளையும் வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை தயாராக இருக்கின்றன என்று ஒலிவியா நிவேராஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் விசேட மருத்துவ நிபுணர்களான பேராசிரியர் நாலிகா குணவர்தன, மருத்துவர் பாலித அபேகோன் மற்றும் மருத்துவர் பத்மலால் டி சில்வா ஆகியயோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

இதேநேரம், நேற்றுமுன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவருடன் இணைய வழியில் கலந்துரையாடி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

## நயினாதீவில்...

கொரோனாத் தொற்றுக்கு மத்தியிலும் அரச வெசாக் திருவிழா, வடக்கு, கிழக்கு மாகாணங்களை முன்னிலைப்படுத்தி, இம்மாதம் 23 முதல் 28 வரை, நாகதீப ரஜமஹா விகாரையில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்கு எதிராகத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தனர்.

இந்தநிலையில், கொரோனாத் தொற்றின் தீவிரத்தையடுத்து நயினாதீவு அரச வெசாக் நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனப் புத்த சாசன, மத மற்றும் கலாசார விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோரின் பங்களிப்புடன், கொழும்பில் அதனை அடையாள ரீதியாக நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி புத்தசாசன அமைச்சால் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## மகாவலி...

மாவை சேனாதிராசா நேற்றுக் காலை அமைச்சருடன் உரையாடியபோதே இந்த வாக்குறுதி அளிக்கப்பட்டது.

மகாவலி அதிகார சபையின் கீழ் முல்லைத்தீவில் 8 கிராம சேவகர் பிரிவுகள் உள்வாங்கப்படுதல், கல்முனை வடக்கு தமிழ் பிரதேச சபை தரமிறக்கப்பட்டமை குறித்து அதற்கு பொறுப்பான அமைச்சர் சமல் ராஜபக்ஷவுடன் நேற்று காலை 10 மணியளவில் தொலைபேசி வாயிலாகப் பேசினார். இது தொடர்பில் மாவை சேனாதிராசா வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

இன்றைய (நேற்றைய) 08.05.2021 பத்திரிகைகளில் முக்கிய செய்தியாக "மகாவலி அதிகார சபையிடம் முல்லைத்தீவு பிரதேசத்தில் செம்மலை முதல் கொக்கிளாய் வரையான எட்டுக் கிராம சேவகர் பிரிவுகளையும் வர்த்தமானி அறிவித்தலின்படி அமைச்சர் நாமல் இராயபக்ஷ கையளிக்க ஞாயிற்றுக்கிழமை (இன்று) வவுனியாவுக்கு வருகிறார் என்பதுதான்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ இவ்விடயம் தொடர்பில் தமிழ் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவ்வாறு கையளிப்பதைத் தடைசெய்வதாக அறிவித்திருந்தார். இவைதான் செய்திகள். இதற்கு மாறாக நாமல் ராஜபக்ஷ அப் பிரதேசங்களை மகாவலி அதிகார சபையிடம் கையளிக்க நாளை (இன்று) வருகிறார். என்ற செய்திகள் வந்திருப்பது பற்றி மாவை சேனாதிராசா அமைச்சருடன் பேசியபோது,

"அவ்வாறு நடைபெறாது", என்று அமைச்சர் வாக்குறுதி வழங்கியுள்ளார். மேலும் அமைச்சர் குறிப்பிட்டதாவது "அப் பிரதேசங்களில் நவீன முறையில் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காகவே முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டார்."

அப்போது மாவை சேனாதிராசா, "அப் பிரதேசங்களில் மகாவலி அபிவிருத்திச்சபை நீர்ப்பாசன நடவடிக்கைகளின்போது தென்னிலங்கையிலிருந்து பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றி அப்பிரதேசங்களின் இனக் குடிப்பரம்பலைச் சீர்குலைக்க முயற்சிக்கப்படும்" என்ற தமிழ் மக்கள் அச்சத்தைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் அவ்வாறு நடைபெற, தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்க இடமளிக்கப்படாது என்றும், தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடம் இவ்விடயம் பற்றிப் பேசித் தீர்மானிப்பேன்" என்றும் குறிப்பிட்டார். (ஐ)

## 17,603 வாக்காளர்...

பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் தாக்கம் ஏற்படும் என்று கூறப்படுகின்றது.

2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் இறுதி செய்யப்பட்டு கடந்த மாதம் 30ஆம் திகதி வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2019ஆம் ஆண்டு பட்டியலில் 4 இலட்சத்து 79ஆயிரத்து 584 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். புதிதாக வெளியிடப்பட்ட பட்டியலில் அந்த எண்ணிக்கை 4 இலட்சத்து 69 ஆயிரத்து 823 ஆகக் குறைந்துள்ளது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குட்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் 2019ஆம் ஆண்டு 92 ஆயிரத்து 264 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். 2020ஆம் ஆண்டு 93 ஆயிரத்து 370 ஆக அது அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காங்கேசன்துறை தேர்தல் தொகுதிக்குட்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளடங்கும் 21 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் முதல் தடவையாக மீளாய்வுக்குட்படுத்தப்பட்டனர்.

இதன்போது 21 ஆயிரத்து 905 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தன. இவர்கள் எங்கிருந்தாலும் தமது பதிவுகளைச் சமர்ப்பிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. அதனைவிட யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் திணைக்களம் விசேட நடவடிக்கைகள் சிலவற்றையும் முன்னெடுத்திருந்தது.

நீக்கப்பட்ட பெயர்களுக்குரியவர்களின் பதிவுகளின் அடிப்படையில் நேரில் சந்தித்து வாக்காளர் பதிவு விண்ணப்பப்படிவத்தை கையளித்திருந்தது. அந்தப் பகுதிக்குரிய பொது அமைப்புக்கள் ஊடாகவும் பெயர்ப்பட்டியலிருந்து நீக்கப்பட்டவர்களில் முடியுமானவர்களை தொடர்புகொண்டு பதிவுகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டனர். கிராம அலுவலர்கள் ஊடாகவும் பதிவுக்கான கோரிக்கைகள் அனுப்பப்பட்டன. இதனடிப்படையில் 4 ஆயிரத்து 302 பேரின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டன. பதிவு செய்யப்படாத 17 ஆயிரத்து 603 பேர் பெயர்ப் பட்டியலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். (ஐ-இ)

## வடக்கில் நேற்று...

களுடன் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்தவர்கள். மற்றைய 5 பேர் மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் இருந்தவர்களாவர்.

இதேபோல, யாழ்ப்பாணம் சிறைச்சாலையை சேர்ந்த ஐவர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தனிமைப்படுத்தலில் இருந்தத ஒருவர், ஊர்காவற்றுறை மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சை பெறச் சென்ற ஒருவர் என்று 14 பேர் தொற்றாளர்களாக நேற்று அடையாளம் காணப்பட்டனர்.

இதேபோன்று வவுனியா மாவட்டத்தில், பொது மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் இருந்த இருவரும், குருக்கள்புதுக்குளத்தில் தொற்றாளர்களுடன் தொடர்புபட்ட ஐவருமாக எழுவர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

அத்துடன், கிளிசொச்சி பொது மருத்துவமனையில் இருவர், பளையில் ஒருவராக மூவரும், மன்னாரில் ஒருவரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ஐ-3)

## கொரோனா...

திட்டங்களை முன்னெடுப்பதற்கு வழங்கவும் தயாராக உள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அன்றாட நடவடிக்கைகளில் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறும் அனைத்து மக்களையும் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் தலைவர் ரெவ். எபினேசர் ஜோசப் கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தனிமைப்படுத்தப்படும் பகுதிகளில் தினசரி ஊதியம் பெற்று வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பில் நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

இதேவேளை, வெளிநாடுகளில் பணிபுரியும் ஏராளமான இலங்கையர்கள் நாட்டுக்குத் திரும்ப முடியாது சிரமப்படுகின்றனர். செலவு குறைந்த தனிமைப்படுத்தல் வசதிகள் இல்லாமை அவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்னையாகும்.

நாட்டுக்கு அதிகமான அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தந்து நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகித்த இவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்காக அனைத்து அமைப்புகளும் இணைந்து செயற்படுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

அத்தோடு நாடு இந்த இடரிலிருந்து மீண்டுவர அனைவரும் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்" - என்றார். (இ)

## 1,890 பேருக்கு...

நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 228 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா நோயாளர்களில் ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 98 பேர் குணமடைந் துள்ளனர். 19 ஆயிரத்து 366 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)

## இலங்கையில்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்தியாவில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றிய ஒருவர் இலங்கையில் முதன் முதலாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து, தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஒருவரிடம் இந்தியாவில் பரவும் பி.1.617 என்ற புதிய வகை வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளது.

பிரிட்டனில் பரவிவரும் பி.1.1.7 என்ற வைரஸ் நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர சபை பகுதி, ஹோமாகம, பொரலஸ்கமுவ ஆகிய பிரதேசங்களிலும் இந்த வைரஸே பரவி வருகின்றது.

அத்துடன் குருநாகல் மாவட்டத்தில் பொல்பித்திகம, குளியாபிட்டி, நிகவரெட்டிய, கனேவத்தை, அம்பலன் பொல, கிரிவுல்ல, பன்னல, வாரியபொல மற்றும் பண்டுவஸ்நுவர ஆகிய பகுதிகளிலும் பிரிட்டனில் பரவிவரும் வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்திலும், பொலநறுவை மாவட்டத்தின் ஹிங்குரக்கொடை மற்றும் மெதிரிகிரிய, பிரதேசங்களிலும் இந்த வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மன்னார் நகரப் பகுதியில் தொற்று உறுதியானவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையின் போதும் பிரிட்டனின் வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, டென்மார்க் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுடன் மத்திய கிழக்கு நாடுகளிலும் பரவி வரும் பி.1.428 என்ற வைரஸ் திரிபுடன் யாழ்ப்பாணத்திலும் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நல்லூரை மையமாகக் கொண்டு குறித்த வைரஸ் பரவி வருகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் கொழும்பின் சில பிரதேசங்களில் பி.1.411 என்ற இலங்கைக்குச் சொந்தமான தனி திரிபுடன் வைரஸ் ஒன்று பரவி வருகின்றது.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் களுத்துறை மாவட்டத்தின் பண்டாரகமை பிரதேசத்திலும் பி.1.525 என்ற நைஜீரியாவில் பரவும் வைரஸ் திரிபும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள தனியார் தனிமைப்படுத்தல் நிலையம் ஒன்றில் பி.1.351 என்ற தென்னாபிரிக்க வைரஸ் திரிபும் கண்டறியப்பட்டுள்ளது" - என்றார். (ஐ-இ)

ஈழநாடு
Eelanadu

## பருத்தித்துறை மருத்துவ அதிகாரி பிரிவில்

# ஆலய நிர்வாகி, சாரதி உட்பட 14 பேருக்கு கட்டாய சுயதனிமை

வடமராட்சி, மே 09

**பருத்தித்துறையில் சுகாதார நடைமுறைகளை மீறி பூசை நடத்திய ஆலய நிர்வாகி, முகக் கவசமின்றி பேருந்தை செலுத்திய சாரதி உட்பட 14 பேர் கட்டாய சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.**

நேற்று மூன்றாவது நாளாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஜென்சன் றொனால்ட், சுதாகரன் தலைமையில் இராணுவம், பொலிஸ், மற்றும் கிராம சேவகர்கள் குழுவாக பருத்தித்துறை பகுதியில் அதிரடியாக கொரோனா கட்டுப்பாட்டு பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, கோவில்களில் மக்களை ஒன்றுகூட இடமளிக்க வேண்டாம் என்ற கட்டுப்பாட்டைமீறி, பருத்தித்துறை சிவன் கோவிலில் முகக்கவசங்களை சரியாக அணியாது பூஜையில் சிலர் பங்கேற்றமை அவதானிக்கப்பட்டது. இதையடுத்து கோவிலின் உரிமையாளர் 14 நாட்களுக்கு கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உடபடுத்தப்பட்டார்.

இதேபோன்று, நெல்லியடி பகுதியூடாக பருத்தித்துறை நோக்கி முகக்கவசம் அணியாது பேருந்தை செலுத்தி வந்த இ.போ.ச. சாரதியொருவரும் விசாரணையின் பின்னர் தனிமைப்படுத்தப்பட்டார்.

மேலும் பருத்தித்துறை வர்த்தக நிலையங்களில் முகக் கவசத்தை முறையாக அணியாத வர்த்தகர்கள் 11 பேர் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேலும் வாடிக்கையாளரின் வருகைப் பதிவுகளை முறையாக பேணாமலும் முகக்கவசத்தை அணியாமலும் சிகையலங்கரப்பில் ஈடுபட்ட நபரெருவரும் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார். (ஐ)

## புலோலி - கச்சாய் வீதி மீளத் திறக்கப்பட்டது!

வடமராட்சி, மே 09

கொடிகாமம் சந்தை கொத்தணி காரணமாக கொடிகாமம் மத்தி, கொடிகாமம் வடக்கு பிரதேசங்கள் முடக்கப்பட்டன. இதனால் கொடிகாமம் மத்தி ஊடான புலோலி - கச்சாய் வீதி கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை செல்லும் பிரதான வீதியும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் கடந்த மூன்று நாட்களாக பயணத் தடை விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபர், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதையடுத்து, நேற்று முன்தினம் பிற்பகல் முதல் இவ் வீதியினூடான போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கொரோனா தொற்று ஒழியவேண்டி தேவாலயங்களில் செப வழிபாடு!

யாழ்ப்பாணம், மே 09

இலங்கை, இந்தியா மற்றும் உலக நாடுகளில் பரவி வரும் கொரோனா தொற்று நீங்க வேண்டி நேற்று கத்தோலிக்க தேவாலயங்களில் சிறப்பு செப வழிபாடுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் மறை. மாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும், துறவற இல்லங்களிலும், இறைமக்களின் இல்லங்களிலும் நேற்று சனிக்கிழமை மாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை செப வழிபாடுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் பெரிய கோயிலில் நேற்று மாலை 5.30 மணிக்கு மணியொலி எழுப்பப்பட்டது. தொடர்ந்து செப மன்றாட்ட வழிபாடு இடம்பெற்றது. (ஐ)

## குழிக்குள் விழுந்து குழந்தை மரணம்!

மட்டக்களப்பு, மே 09

மட்டக்களப்பு - வாகனேரி பகுதியில் குழிக்குள் விழுந்து பெண் குழந்தை ஒன்று உயிரிழந்தது.

கிணறு அமைப்பதற்காக தோண்டப்பட்டிருந்த குழிக்குள் தவறி விழுந்தே குழந்தை உயிரிழந்தது.

சம்பவம் முற்பகல் 11.30 அளவில் இடம்பெற்றுள்ளது. வாழைச்சேனை பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## மன்னார் இரத்த வங்கி அவசர கோரிக்கை!

மன்னார், மே 09

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, குருதிக் கொடை வழங்கி உதவுமாறு மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் செந்தூர் பதிராஜா அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

இரத்த தானம் செய்ய விரும்புவர்கள் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் அல்லது 023 222 2261, மற்றும் 023 222 2349 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்துமாறு மருத்துவர் கேட்டுள்ளார். (ஐ)


## மரண அறிவித்தல்

பிறப்பு 1949 . 03 . 03



இறப்பு 2021 . 05 . 05

### அருணாசலம் சேனாதிராஜா

யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சேனாதிராஜா கடந்த (05.05.2021) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், அருணாசலம் கந்தையா - பத்தினியம்மா தம்பதியரின் அன்பு மகனும், நடராசா - எம்மா அற்புதமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வாம்பிகை பத்மினி அவர்களின் அன்புக் கணவரும், லஷ்சுமகுமரன், சங்குருத்தியன், கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசோதி, சிவனேசன், ஜெகசோதி யோகேந்திரன், பத்மாவதி ஈசன், புனிதநாதன் அருணாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரையன் கெவின் க்ரூஸ் அவர்களின் அன்பு மாமனாரும், சந்திராதேவி, வசந்தமல்லிகா, சித்திராதேவி, ராஜேந்திரன், மகேந்திரன் (பிரித்தானியா), பத்மராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஐசக் கிருஷாந்த் க்ரூஸ் அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.05.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 04.30 மணிதொடக்கம் பி.ப 05.30 மணிவரை 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நாளை (10.05.2021) காலை 7.00 மணியளவில் அதே இடத்திலேயே இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
**லஷ்சுமகுமரன் சேனாதிராஜா**
**மகன் +14169062734**

## மரண அறிவித்தல்

பிறப்பு 1951 . 04 . 07



இறப்பு 2021 . 05 . 06

### முருகேசு சேதுராஜா

யாழ். நெடுந்தீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சேதுராஜா கடந்த (06.05.2021) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற முருகேசு - நாகம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கனகசபை - மகாலச்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், சேந்தினி, தர்மினி (லண்டன்), நிஷாந்தன், சோபிதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சந்திரசேகரன், வீரசிங்கம், சகுந்தலாகுமாரி, விஜயராணி, நாகேஸ்வரி, தனபாலசிங்கம், பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சபாரத்தினம், தர்மரத்தினம், தர்மலிங்கம், சிவஞானவேணி, யோகராணி, கோமலேஸ்வரி, காலஞ்சென்ற தர்மராசா, சுப்பிரமணியம், செல்வரத்தினம், பராசக்தி, சந்திரமதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பூரணம் குஞ்சியம்மா அவர்களின் பெறாமகனும், ராஜ்குமார், கோடீஸ்வரன் (லண்டன்), டிஷானி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹவேக்கா, றிஷ்மிகா, கனிஸ்கா (லண்டன்), ஏகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.05.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் 6.00 வரை Dundas St E Mississauga, ON, Canada பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நாளை (10.05.2021) காலை 7.00 மணியளவில் அதே இடத்திலேயே இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
**சோபிதன் - மகன் + 12269294303**

தகவல்:
**குடும்பத்தினர்.**


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை- தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-உன்னை தேடி
4.30 மணி : காட்டுடன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்-பாடகி ரத்தியா
6.00 மணி : HELLO கோடம்பாக்கம்
06.30 அப்பத்தா(ய் )-அன்னையர்தின சிறப்பு நிகழ்ச்சி



**இரவு**
7.00 மணி : SPOTLIGHT- ரேலோவின்
ஊடகப்பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரின்
கலந்து கொள்கிறார்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்- க.பொ.த. உயர்தரப்
பரீட்சையில் சாதித்த மாணவர்களோடு
"சாதனைகளுக்கு பின்னால்"
10.00 மணி: பதிவு-நேர்கொண்ட பார்வை -
புதிய அரசியல் நிகழ்ச்சி



## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரீவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு